விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆு மாசி மீ 20-ம் உ | ஞாயிற்றுக்கிழமை | (04 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 06 | ஓசை 14

1983-07-
பகுதி

## யாழ். நகரைச் சுத்தமாக்க குப்பைத் தொட்டிகள் அறிமுகம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் இரு பகுதிகளின் வீதிகளில் சுத்தத்தைப் பேணுவதற்காக, யாழ். மாநகர சபையினரால் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட உள்ளன.

நகரத்தைத் துப்புரவாக வைத்திருக்கும் நோக்குடன் சிலஅணுகு முறைகளை யாழ். மாநகரசபை நிர்வாகம் பரீட்சார்த்த ரீதியில் செய்ய எண்ணியதன் முதல் படியே இது என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

ஆரியகுளம் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, சத்திரச்சந்தி, ஸ்ரான்லி வீதி, ஆகிய வீதிகளிலும் அவற்றுக்குட்பட்ட இடங்களில் இருக்கும் வீதிகளிலும் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்படும் என்றும், இதைவிட வியாபாரிகள் தத்தமது வசதிக்காக தாங்களே தொட்டிகள் அமைக்க வேண்டும் என்றும், குறிப்பிட்ட வீதிகளில் உள்ள மின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஈழப் பிரகடனத்தின் விளைவு

# பாரதத்தில் இனி புகலிடமில்லை!

## டில்லி அரசு அறிவிப்பு!

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து தப்பியோடிவரும் எந்தப் போராளிக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் இனி இந்தியாவில் இடமளிக்கமுடியாது என்று இந்திய அரசு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணசபை சுதந்திர தன்னாதிக்கமுற்ற ஈழ ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்வதற்குப் புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் அரசியல் நிர்ணயசபையாகத் தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டதை இந்தியா ஒருபோதும் ஆகரிக்கவில்லையென்று தெரிவித்ததைத் தொடர்ந்து ஈழத்திலிருந்து வரும் போராளிக் குழுக்களைச் சேர்ந்த எவருக்கும் புகலிடம் அளிப்பதில்லையென்று இந்திய அரசு தீர்மானித்திருப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழப் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று ராஜீவ் காந்தி அமைச்சரவையில் இணை அமைச்சராகவும் ஈழத் தமிழர் பிரச்சனையில் முக்கிய பேச்சாளருமாகிய திரு. ப. சிதம்பரம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் முஸ்லிம் மக்களுடன் மாத்தயா சந்திப்பு

(மட்டக்களப்பு)

காத்தான் குடி முஸ்லீம் பிரமுகர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மகேந்திர ராஜாவைச் (மாத்தாயா) சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இச் சந்திப்பின்போது முஸ்லீம் பிரமுகர்கள் கடந்தகால அசம்பாவிதங்களால் தமக்கேற்பட்ட கசப்பான அனுபவம் பற்றியும், தமிழர்களும் - முஸ்லிம்களும் புரிந்துணர்வுடன் எதிர்காலத்தில் சமாதானமாக வாழ வேண்டும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## பெருமாள் போடும் சத்தவெடி இதுதான்

(கொழும்பு)

வட - கிழ் மாகாணத்தைத் தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட ஒரு நாடாகப் பிர

''பெருமாளை இந்த மண்ணுக்குக் கூட்டிக்கொண்டு வந்தவர்கள் இந்தியர்கள் தான். இந்தியப்படை இப்

## சிரிப்புக்குரிய கடைசித் துரும்பு பெருமாள் பற்றி ரஞ்சன்

(கொழும்பு)

முதல்வர் வரதராஜப் பெருமாள்வடக்குகிழக்கு மாகாண சபையை சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்தமை பெரிய சிரிப்புக்கிடமானவிஷயம் என்றும், இதுதான் முதல்வர் வரதராஜப் பெருமாளின் கடைசித் துரும்பு என்றும் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜெயரெட்னா சண் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

## பல்கலை மாணவி கடத்தல்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் கைது தொடர்பாக ஆராயும் குழு, கொழும்பு பல்கலைக் கழக வர்த்தக பீட மாணவி ஒருவர் இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மாவத்தகமவில் ஒக்னேகட என்ற கிராமத்தில் பி. முத்துநாயக்க என்ற இந்த மாணவி கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட இம்மாணவி தொடர்பான தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று மேற்படி குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இடதுசாரிகள்

## காலம்தான் பதில் சொல்ல

## ஜனாதிபதிக்கு பெருமாள் எச்சரிக்கை

(கொழும்பு)

''உத்தேச ஈழ ஜனநாயக குடியரசு ஒரு அரசாங்கமாக மாறவில்லை. ஒரு வருடத்திற்கு அது ஒரு தேசிய நிர்ணயசபையாகவே இருக்கும். ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா இந்த ஒருவருடகாலத்திற்குள் எமது திட்டங்களைச் சீர்குலைக்க முயல்வாராக இருந்தால் அதன் விளைவுகளை அவரே அனுபவிக்க வேண்டி வரும்''.

மேற்கண்டவாறு உத்தேச ஈழ ஜனநாயக குடியரசின் தலைவராக மாறியுள்ள வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தலைவர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சந்தி வெளியில் சந்திப்பு

ஓட்ட மாவடி, சந்தி வெளி ஆகிய கிராமங்களில் சிற்றூரவை கிளை நிர்வாகிகளோடு கட்சியின் அமைப்பாளர் தி. பரமமூர்த்தியும் செங்கதிரும் கட்சியின் அமைப்பு முறைப் பற்றி கருத்தரங்கு வைத்தனர் ஓட்டமாவடியில் மூன்று சிற்றூரவை நிர்வாக

## கடத்தல்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் கைது தொடர்பாக ஆராயும் குழு, கொழும்பு பல்கலைக் சழக வர்த்தக பீட மாணவி ஒருவர் இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவித்துள்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மாவத்தகமவில் ஒக்னேகட என்ற கிராமத்தில் பி. முத்துநாயக்க என்ற இந்த மாணவி கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட இம்மாணவி தொடர்பான தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று மேற்படி குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## எம். பிக்கு கடும் சுகவீனம்

(சென்னை)

யாழ்ப்பாண மாவட்ட ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி இரத்தின சபாபதி கடும் சுகவீனம் காரணமாக சென்னை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது நிலை ஆபத்தானதாகவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## இரண்டு புதிய கட்சிகள்

(கொழும்பு)

ஈழமக்கள் ஜனநாயக அமைப்பையுப் தேசியதொழில் யூனியன் அமைப்பையும் தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளாக அங்கீகரித்துள்ளார்.

## தொடர்ந்தும் எம். பி. மார்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தொடர்ந்தும் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களாகவே இருப்பார்கள் என்றும் இவர்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 28ம் திகதிவரை இப்பதவியை வகிப்பார்கள் எனறும் ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள்தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து ஏழுபேர் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் சார்பில் எம் பிக்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(புதுடில்லி)

**இலங்கையிலிருந்து தப்பியோடிவரும் எந்தப் போராளிக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் இனி இந்தியாவில் இடமளிக்கமுடியாது என்று இந்திய அரசு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணசபை சுதந்திர தன்னாதிக்கமுற்ற ஈழ ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்வதற்குப் புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் அரசியல் நிர்ணயசபையாகத் தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டதை இந்தியா ஒருபோதும் ஆகரிக்க வில்லையென்று தெரிவித்ததைத் தொடர்ந்து ஈழத்திலிருந்து வரும் போராளிக் குழுக்களைச் சேர்ந்த எவருக்கும் புகலிடம் அளிப்பதில்லையென்று இந்திய அரசு தீர்மானித்திருப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழப் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று ராஜீவ் காந்தி அமைச்சரவையில் இணை அமைச்சராகவும் ஈழத் தமிழர் பிரச்சனையில் முக்கிய பேச்சாளருமாகிய திரு. ப. சிதம்பரம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(மட்டக்களப்பு)

காத்தான் குடி முஸ்லீம் பிரமுகர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மகேந்திர ராஜாவைச் (மாத்தாயா) சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இச் சந்திப்பின்போது முஸ்லீம் பிரமுகர்கள் கடந்தகால அசம்பாவிதங்களால் தமக்கேற்பட்ட கசப்பான அனுபவம் பற்றியும், தமிழர்களும் - முஸ்லிம்களும் புரிந்துணர்வுடன் எதிர்காலத்தில் சமாதானமாக வாழ வேண்டும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணசபைத் தலைவர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## இடதுசாரிகள் கண்டனம்

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் ஒரு தலைப்பட்சமான ஈழ ஜனநாயக குடியரசுப் பிரகடனத்தை அதன் தோழமைக்கட்சிகளான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, நவசமஜமாஜக் கட்சி என்பனவும் எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் செனமன் அதன் செயலாளர் கே. பி. சில்வா நவசமஜமாஜக் கட்சிச் செயலாளர் கலாநிதி கருணாரத்தின விக்கிரமபாகு ஆகியோரும் பெருமாளின் செயலை எவ்வகையிலும் ஏற்க முடியாது எனக் கூறியுள்ளார்கள். மற்றொரு தோழமைக் கட்சியான ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி மட்டும் மௌனம் சாதிக்கிறது.

## காலம்தான் பதில் சொல்ல வேண்டும் என்கிறார் சாம்

சுதந்திர தன்னாதிக்கமுள்ள ஈழ ஜனநாயக குடியரசாக வடக்குக் கிழக்கு மாகாண சபையைப் பிரகடனப்படுத்துவதற்குரிய அரசியல் அமைப்பை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபையாக மாகாண சபை நிறைவேற்றும் தீர்மானர்பற்றி மாகாண சபையின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சாம். தம்பிமுத்து கொழும்பிலுள்ள பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியில்.

"நாங்கள் 19 கோரிக்கைகளைவிடுத்துள்ளோம். இவை தமிழ் மக்கள்சார்பில்விடுக்கப்பட்ட கோரிக்கைகள். அரசாங்கம் இதையிட்டு தமிழ் மக்களுடன் பேசித்தீர்க்க விரும்பினால் இந்த 19 கோரிக்கைகளை மாற்றியமைக்க தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கிறது" என்று தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கு மாகாணக்குழு இப்போது பலவீன

(6ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாள் போடும் சத்தவெடி இதுதான்

(கொழும்பு)

வட - கீழ் மாகாணத்தைத் தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட ஒரு நாடாகப் பிரகடனம் செய்து அதனை உடன் நடைமுறைப்படுத்தாது ஒருவருட காலத்திற்கு ஒத்தி வைத்திருப்பதுபற்றி இலங்கையின் பிரபல அரசியல் அவதானி ஹெக்டர் அபயவர்த்தனா அவர்களிடம் கேட்கப்பட்டபோது

"பெருமாளை இந்த மண்ணுக்குக் கூட்டிக்கொண்டு வந்தவர்கள் இந்தியர்கள் தான். இந்தியப்படை இப்போது வெளியேறப்போகிறது பெருமாளும் அவர்களுடன் போகவேண்டியவர்தான ஆகவேதான் அவர் போகமுன் சத்தவெடி போட்டுவிட்டு போக விரும்புகிறார்" என்று குறிப்பிட்டார்.

## சந்தி வெளியில் சந்திப்பு

ஓட்டமாவடி, சந்தி வெளி ஆகிய கிராமங்களில் சிற்றூரவை கிளை நிர்வாகிகளோடு கட்சியின் அமைப்பாளர் தி. பரமமூர்த்தியும் செங்கதிரும் கட்சியின் அமைப்பு முறைப் பற்றி கருத்தரங்கு வைத்தனர் ஓட்டமாவடியில் மூன்று சிற்றூரவை நிர்வாக உறுப்பினர்களும் சந்து வெளி இரண்டு சிற்றூரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

## அரசியல் நிர்ணயசபை மே. 7இல் கூடுகிறது

(திருகோணமலை)

ஈழ ஜனநாயகக் குடியரசின் அரசியல் நிர்ணய சபையாக மாறியுள்ள வட-கீழ் மாகாண சபை இனிமேல் மாகாண சபைக்குரிய செயல்பாட்டை மேற்கொள்ள மாட்டாது. அரசியல் நிர்ணய சபையின் முதலாவது கூட்டம் இந்த வருடம் மே மாதம் ஏழாம் திகதி கூடும் என முதல்வர் பெருமாள் அறிவித்துள்ளார். கடைசிக் கூட்டம் இந்த வருடம் பெப்ரவரி மாதம் முடிவடையும்.

உத்தேச அரசியல் நிர்ணய சபை எங்கே கூடும் என்பதை மட்டும் முதல்வர் தெரிவிக்கவில்லை.

## கிராமியப் பொருளாதாரம் மிகப் பின்தங்கி விட்டது

### கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா

(மட்டக்களப்பு)

"எமது கிராமிய பொருளாதார வாழ்வு மிகவும் பின்தங்கவிட்டது. ஒடுக்குமுறையின் பழுவைச் சுமந்து நிற்கும் எமது மக்கள் இன்று பலதரப்பட்ட சமூக பொருளாதார பிரச்சினைளை எதிர்நோக்கி நிற்கின்றார்கள்" என நேற்று கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா (மகேந்திரராசன்) தெரிவித்தார்.

நேற்று கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடந்த கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்ணணித் தலைவர் மாத்தயாவுடன் பொதுச் செயலாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)



## நியமனம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக திரு. கே. வி. இராசலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

உடுத்துறை கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய திரு. இராசலிங்கத்திற்கு, பதவி உயர்வுடன் இந்நியமனம் கிடைத்துள்ளது.

## சட்டவிரோதமான மின்பாவனை யாழ். நகரில் குறைந்துள்ளது.

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் இப்பகுதியில் மின் விநியோகத் திட்டம் இலாபத்தில் இயங்குகிறது. என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பீ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபைக்கு சுமார் நாநூற்றி எழுபது லட்சம் ரூபா பணம் யாழ். மாநகர சபையினால் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்குரிய பணம் மாநகர சபையிடம் இல்லை. மேற்படி மின்சாரசபைக்கு கொடுக்க வேண்டிய பணத்தில் நூற்றி எண்பது லட்சம் ரூபாவரை மக்களிடம் அறவிடக்கூடியதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள சில இடங்களில் மின் குமிழ்கள் மங்கல் வெளிச்சம் தருவது பற்றிக் கேட்ட போது

'மின் மாற்றிகளில் மின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அபுயூசுப்புக்கு கல்தா!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் போக்குவரத்து கைத்தொழில் அமைச்சர் அபூயூசுப் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பதவியை இழக்க இருக்கிறார் எனத் தெரியவருகிறது. இதற்கான முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு எடுத்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ்வும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்சும் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர்படை ஆயுதங்களுடன் தலைமறைவு

(திருகோணமலை)

பல்வேறு காரணங்களுக்காகவும் பலர், திருகோணமலையில் மக்கள் தொண்டர் படையிலிருந்து விலகி வருவதாகத் தெரிய வருகிறது,

ஆரம்பத்தில் பலர் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்தும் தொண்டர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முதல் பெண் மேயர்

(கண்டி)

இலங்கையின் முதல் பெண் மேயராக சந்திரா ரணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார் கண்டி மாநகர சபையின் மேயராக இவர் கடமையாற்றுவார்,

இதேவேளை பதுளை மாநகர சபையின் மேயராக தமிழர் ஒருவர் பொறுப்பேற்றுள்ளார். நவசிவம்மகாதேவா என்ற இவர் கடந்த பொதுத் தேர்லில் ஐ. தே. க சார்பில் போட்டியிட்டவராவார்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

வீடும் காணியும் விற்பனை

5பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு வெறும் காணியாகவும், வீடும் காணியாகவும், பிரித்தும் விற்பனை செய்யப்படும். விபரங்களுக்கு இல18, இராமநாதன் வீதி, நாயன்மார் கட்டு, நல்லூர். க.மகாதேவா, No, 68, அத்தியடிபுது வீதி, யாழ்பாணம்.

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு இயற்கை பொருட்கள், அடங்கிய ''சீயாக்காய் பவுடர்'' எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M· No. 77ᅩ K. K. S. Road JAFFNA. B 64

ரைப்பிங்

தமிழ்ரைப்பிங் ஆங்கில இலக்டோனிக் ரைப்பிங் வேலைகளை சிரமமின்றி தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'


## சங்கரத்தையின் சாதனை

(சங்கரத்தை)

பதினைந்து பாடசாலைகளைக் கொண்ட வட்டுக்கோட்டைக் கொத்தணி அமைப்பில் இருந்து, ஐந்து மாணவர் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தினர். அவர்களுள் இருவர் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையைச் சார்ந்த செல்விகள் ச. தயாளினி இ.அமுதினி ஆவார்கள்.

இந்திய வம்சாவளியினர்

# மே மாத இறுதிக்குள் வாக்காளராக பதிய வேண்டும்

(கொழும்பு)

1988 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 39 ஆம் இலக்க நாடற்றவருக்கும் பிரஜா உரிமை வழங்கும் சிறப்பு ஏற்பாடுகளின் சட்டத்தில் பிரகாரம் 89 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட 10 ஆவது இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்யும் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இந்திய வம்சாவழி மக்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தாங்கள் நிரந்தரமாக வதியும் தேர்தல் மாவட்டங்களில் அதற்கான உரிய படிவத்தில் 90 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி வரையோ அதற்கு முன்னதாகவோ தாங்கள் வதியும் மாவட்டத்தில் தேர்தல் அலுவலகத்திற்கு விண்ணப்பித்து அந்தத் தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அரசாங்கம், நாட்டில் உள்ள செயலகங்களுக்கு இந்திய வம்சாவழி ஆட்களை வாக்காளர் பதிவேட்டில் சேர்த்துக்கொள்வது பற்றி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

இந்திய வம்சாவழி மக்கள் வாக்காளர் இடாப்பில் தங்களை பதிவு செய்து கொள்வதற்கு அனுப்பும் விண்ணப்பத்தில் அதன் கீழ் அச்சிடப்பட்டிருக்கும் சத்தியக் கடதாசியை சமாதான நீதவான் முன்பு கையொப்பம் இட்டு சமர்ப்பித்தல் போதுமான தாகும்.

இந்தச் சத்தியக் கடதாசிக்கு ஒட்டப்பட வேண்டிய 2.00 ரூபா முத்திரைக் கட்டணத்திலிருந்து இவர்கள் விலக்கப்பட்டுள்ளார்கள். எனவே இதுவரை காலமும் வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களை பதிந்து கொள்ளாத 18 வயதுக்கு மேற்பட்ட இந்திய வம்சாவழி ஆட்கள் 1990 மே எட்டுக்கு முன்னதாக மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பங்களை தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி பதிவு செய்ய வேண்டும். (தி)

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜெனரேட்டர்

(அச்சுவேலி)

வாதரவத்தை செஞ்சிலுவைச் சங்க ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கு செஞ்சிலுவைச் சங்கம் ஜெனரேட்டர் ஒன்றை வழங்கவுள்ளது.

வாதரவத்தைப் பகுதியில் மின்சார வசதி இல்லாமையினால் இவ் ஏற்பாட்டைச் செஞ்சிலுவைச் சங்கம் செய்துள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜெனரேட்டர் வழங்குவது பற்றி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு செஞ்சிலுவைச் சங்க யாழ். நிர்வாகம் அறிவித்துள்ளது. (16)

## பஸ் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக யாழ். மத்திய பஸ்நிலையத்தில் மாலை வேளையில் மக்கள் மணிக் கணக்காக பஸ்ஸிற்கு காத்து நிற்பது கவனிக்கக்கூடியதாக இருந்தது.

இதுபற்றி பஸ்நிலைய அலுவலக அதிகாரி ஒருவரிடம் வினாவிய போது தற்போதைக்கு தொடர்ச்சியாக பஸ்களை சேவையில் விட முடியாதநிலை இருப்பதாகவும் பஸ் பற்றாக் குறையே இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (லோ)

# இறைவரி திணைக்களம் இயங்குகின்றது

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில் 1987-ம் ஆண்டு இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து இயங்காதிருந்த இறைவரித் திணைக்கம் 26ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் செயல்பட ஆரம்பித்துள்ளது. வாகன வரிப்பத்திரங்கள் விநியோகிக்கும் வேலைகள் மிகத் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டு, செயற்பட்டு வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை 38 வாகனங்களுக்கும், 28ஆம் திகதி புதன் 80உம், 1ஆம் திகதி வியாழன் 100உம், 2ஆம் திகதி வெள்ளி 120உம், மொத்தம் 338 வாகனங்களின் உரிமையாளர்கள் இப்பத்திரங்களைப் பெற்றுள்ளனர் எனத் திணைக்கள அதிகாரி அறிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் இறைவரிப் பகுதியில் பத்திரத்தைப் பெற்று பூர்த்தி செய்து மேல் ஒப்பமிடப்பட்ட பின் யாழ். இலங்கை வங்கியில் பணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டுத் திணைக்களத்தில் சமர்ப்பித்த பின்னர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் எனத் திணைக்களப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (24)

## சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் தடை

(அச்சுவேலி)

அச்சுவேலிப்பகுதியில் நடைபெற்றுவரும் சட்டவிரோத மின்சாரப் பாவனை, கசிப்பு வியாபாரம், வீடுகளில் கள்ளு விற்பனை செய்தல், அனுமதி இன்றி மரங்களில் கள்ளுச் சீவல், வீடுகளுக்குச் சென்று கள்ளுக்குடித்தல் ஆகியசெயல்களை உடனடியாகக் கைவிட வேண்டும் என ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் செய்யப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) தெங்கு பனம் பொருட்கள் அபிவிருத்திச் சங்கம் ஒலிபெருக்கி மூலம் கிராமம் கிராமமாக அறிவித்தல் செய்தது.

சட்ட விரோத மின்பாவனை கசிப்பு வியாபாரம், வீடுகளில் கள்ளு விற்றல், கள்ளுக் குடித்தல், அனுமதியின்றி மரம் சீவல் ஆகிய செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (16)

## முன்மாதிரி பரீட்சை

(புங்குடுதீவு)

வேலணை கல்விக் கோட்டம் க.பொ.த(சா/த)பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 'முன் மாதிரி பரீட்சை' ஒன்றினை வேலணை கல்வி கோட்டமட்டத்தில் விரைவில் நடாத்தவுள்ளது.

முக்கியமான ஆறு பாடங்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்படும் என-தெரிய வருகின்றது. (25)

## பற்றாக்குறை

[..]வலி-தென் மேற்குபிரதேச சபையின் மின்சாரப் பகுதியில் கடமையாற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையாக இருக்கின்றனர்குறைந்ததுபத்துப்பேரான வேலைக்குத் தேவைப்படுமிடத்தில் நான்குபேர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். அண்மைக்கால வன்முறைச் சம்பவங்களின் போது சேதமடைந்த பழுதடைந்த மின்சார இணைப்புக்களைச் செம்மைப்படுத்துவது இதனால் தாமதமாகின்றது. இது பற்றி இச்சபையின் மின் அத்தியட்சகர் மேலும் தெரிவிக்கையில், நாளாந்த, சாதாரண மின்பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கவே இந்த ஊழியர்கள் போதாது இருக்கும் போது அவசர திருத்த வேலைகளைச் செய்து முடிப்பது பெரும் சிரமமாகவே இருக்கின்றது. இருந்தும் எமது ஊழியர்கள் காலத்தையும் சிரமத்தையும் பாராமல் தற்கால சூழ்நிலையைக்கருத்தில் கொண்டு கடமையாற்றுவதால் வேலைகளை ஓரளவாவது செய்து முடிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றார். (19


❋ நவநாகரீக புடவைத்தினுசுகள்
❋ அலங்காரப் பொருட்கள்
❋ மீன்பிடி உபகரணங்கள்

அனைத்திற்கும்
யாழ். நகரில் சிறந்த இடம்

மணியம்ஸ்

15, ஜுபிலி பஜார்
தொலை பேசி: 23545 யாழ்ப்பாணம்
(B - 152)



இன்றைய சினிமா

70 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10 30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை



ஈழநாதம் வாழ்க! வளர்க!

காலத்திற்கேற்ப நியாய விலையில்

பதினைந்து பாடசாலைக ளைக் கொண்ட வட்டுக் கோட்டைக் கொத்தணி அமைப்பில் இருந்து, ஐந்து மாணவர் 5 ஆம் ஆண்டு புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தினர். அவர்களுள் இருவர் சங்கரத்தை சின்னம் மா வித்தியாசாலையைச் சார்ந்த செல்விகள் ச. தயா ளினி இ.அமுதினி ஆவார்கள்.

பட்டிருக்கும் சத்தியக் கடதா சியை சமாதான நீதவான் முன்பு கையொப்பம் இட்டு சமர்ப்பித்தல் போதுமான தாகும்.

இந்தச் சத்தியக் கடதா சிக்கு ஒட்டப்பட வேண்டிய 2.00 ரூபா முத்திரைக் கட்ட ணத்திலிருந்து இவர்கள் விலக் கப்பட்டுள்ளார்கள். எனவே

ஸிற்கு காத்து நிற்பது கவ னிக்கக்கூடியதாக இருந்தது.

இதுபற்றி பஸ்நிலைய அலு வலக அதிகாரி ஒருவரிடம் வினாவிய போது தற்போ தைக்கு தொடர்ச்சியாக பஸ் களை சேவையில் விட முடி யாதநிலை இருப்பதாகவும் பஸ் பற்றாக் குறையே இதற்கு காரணம் எனவும் அவர் தெரி வித்தார். (லோ)

பெருக்கி மூலம் கிராமம் கிரா மமாக அறிவித்தல் செய்தது.

சட்ட விரோத மின்பாவனை கசிப்பு வியாபாரம், வீடு களில் கள்ளு விற்றல், கள் ளுக் குடித்தல், அனுமதியின்றி மரம் சீவல் ஆகிய செயல் களில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது) (16)


மணியம்ஸ்

15, ஜுபிலி பஜார்
யாழ்ப்பாணம்
தொலை பேசி: 23545

(B - 152)



வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை



ஈழநாதம் வாழ்க! வளர்க!

காலத்திற்கேற்ப நியாய விலையில்
தரமான பொருட்களை வழங்குவது

# தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

கூட்டுறவுக் கொள்கைகளில் தளராத சேவையளிக்கும்

## தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில்

நிறைந்த பயனைப் பெற இன்றே அங்கத்தவராகச் சேருங்கள்

## எமது முதன்மையான சேவைகள்

நுகர்ச்சிப் பொருள் மொத்த, சில்லறை விற்பனை
புடைவை, இரும்பு, சூரிபொருள் நிலையம்
சிற்றுண்டிச்சாலை, அரிசி ஆலை
விவசாய இரசாயனப் பொருட்கள்
கட்டிடப் பொருட்கள்
பாலர் பாடசாலை

போட்டேஸ்ரட் பிரதிகள்
ஆங்கில தட்டச்சு வகுப்புகள்
லொறிச் சேவைகள்
கிராமிய வங்கி சேவைகள்
மகளிர் குழு தொழிற்துறை வகுப்புகள்
வாடகை கதிரைகள்

B.153

# இன்ரப்போலில் சேர சோவியத் ரஷ்யா விருப்பம்

சர்தேச குற்றத் தடுப்பு பொலிஸ் நிறுவனமான இன்ரப்போலில் சேர சோவியத் யூனியன் விரும்புவதாகத் தெரியவருகின்றது. நடப்பாண்டு செப்டம்பர் மாதத்தில் சோவியத் யூனியன் இன்ரப் போலில் சேரும் என இன்ரப்போலின் பொதுக் காரியதரசி றேமென் கென்டால் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபையால் ஒழுங்கு செய்யப்பட குற்றத் தடுப்பு மகாநாடு ஒன்றுக்கு கென்டால் மொஸ்கோ சென்றிருந்தார். அச்சமயம் சோவியத் யூனியன் இன்ரப்போலில் சேர விண்ணப்பிக்க இருப்பதாக சோவியத் உள்துறை அமைச்சர் தனக்குத் தெரிவித்தாக கென்டால் தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியன் உரிய காலத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால், அவ் விண்ணப்பம் நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், செப்டம்பரில் ஒட்டாசாவில் நடைபெற விருக்கும் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் சோவியத் யூனியனும் பங்கு பற்றக் கூடியதாக அமையும் என்றும் கென்டால் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசும் போது கூறினார்.

சர்வதேச குற்றத் தடுப்பு புலனாய்வு நிறுவனமான இன்ரப்போலில் 100 அங்கத்துவ நாடுகள் உள்ளன. இன்ரப்போல் அங்கத்துவ நாடுகளுடன் குற்றம் தொடர்பான தகவல்களையும் பரிமாறிக் கொள்கிறது, கள்ளநோட்டு வெளியிடுதல், மோசடி, கடத்தல், போதை வஸ்து கடத்தல் ஆகிய குற்றங்கள் தொடர்பான தரவுகளை அங்கத்துவ நாடுகள் இன்ரப்போலுக்குக் கொடுத்து உதவுகின்றன.

இன்ரப்போலில் சோவியத் யூனியன் சேர்வது சோவியத் யூனியனுக்கு மட்டுமல்லாமல் சகல அங்கத்துவ நாடுகளுக்கும் பயனாக அமையும் என்றும், குறிப்பாக போதை வஸ்து கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஒத்தாசையாக இருக்கும் என்றும் கென்டால் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

ஆப்கனிஸ்கானிலும், பாகிஸ்தானிலும் போதை வஸ்து கடத்தல்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், கடத்தல் காரர்கள் சோவியத் யூனியன் தென் பகுதிக் குடியரசுகளுடன் போதை வஸ்துக்களை கப்பல் மூலமாகக் கடத்தக் கூடும். சோவியத் யூனியன் இன்ரபோலில் சேர்வது சோவியத் யூனியனுக்குப் பயனாக அமையும் போதை வஸ்து கடத்தல் தொடர்பான விபரங்களை நாம் சோவியத் யூனியனுக்குக் கொடுத்து உதவலாம். ஆனால் தொடர்பு என்பது இருவழிப் பாதை. எமக்கும் சோவியத் யூனியனிடமிருந்து விபரங்கள் தேவைப்படலாம். இவ்வாறு றேமென் கென்டால் தெரிவித்தார்.

## காஷ்மீரில் ஊரடங்குமக்கள்வெளியேற்றம்

(ஸ்ரீநகர்)

இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின பல முக்கிய நகரங்களில் காலவரையின்றி ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ் நடைமுறை யாது கடந்த வியாழக் கிழமை ஸ்ரீநகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் அறிவிக்கப்பட்டதாக தெரிகிறது.

கடந்த வியாழக்கிழமை காஷ்மீரில் இந்திய ஆட்சி நடப்பதைக் கண்டித்து ஆயிரக் கணக்கான முஸ்லீம்கள் ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டம் செய்தபோது பொலிசார் சுட்டதில் 30 பேர் கொல்லப்பட்டதும் பலர் காயமடைந்ததும் செரிந்ததே. இதனைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது.

இதுபற்றி பாகிஸ்தான் கருத்து வெளியிடும் போது காஷ்மீர் மக்களின் எழுச்சியை இந்தியா காட்டு மிராண்டித்தனமாக அடக்கி இருக்கிறது எனக் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை காஷ்மீர் பள்ளத்தாக்கில் இருந்து சுமார் எட்டாயிரத்து எழுநூறு சிறுபான்மை குடும்பத்தினர் வெளியேறி ஜம்முவில் குடியேறியுள்ளனர் என்று சட்டசபை காஷ்மீர் ஒருங்கிணைப்புக் குழு கமிட்டியின் உறுப்பினர் தெரிவித்தார். குடிபெயர்ந்தவர்களுக்கு ரேஷன் அட்டையை அரசு வழங்கி வருகிறது. இதுவரை சுமார் இரண்டாயிரம் பேருக்கு அரசாங்கம் ரேஷன் அட்டை வழங்கப்பட்டு இருப்பதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றது.

## ஹோட்டலில் தீ! 16 பேர் கருகி மாண்டனர்

(செய்ரோ)

கெய்ரோவில் ஆடம்பரக் ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயம் அடைந்தனர். 1000 பேர் அளவில் தங்கியிருந்த ஹோட்டலில் பெரும்பான்மையினர் வெளிநாட்டவராகும். ஆறு மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தில் மேல் தளங்களில் இருந்து குதித்ததினால் பலர் பலத்த காயத்திற்கு உள்ளாகினார். இறந்தவர்களில் எட்டுப் பிரான்ஸ் நாட்டினரும், ஒரு பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணும் அடங்குகின்றார்கள்.

## இனவாதத்தை எதிர்த்து மண்டேலா போராடினார்

ஜனாப் அஸீஸ்

(கொழும்பு)

இனவாதம் என்பது தேசிய தன்மையைஅழித்து விடக்கூடியது. இனவாதத்திற்கு எதிராசப் போராடிய போராளி நெல்சன் மண்டேலாவுக்கும், அவரது இனவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் எமது ஆதரவை தெரிவிப்பது நமது கடமையாகும்.

இவ்வாறு ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் பேசுகையில் குறிப்பிட்டார்.

தேசபத்தன் நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக கிறிஸ்தவர் சங்க மண்டபத்தில் திரு. பெர்னாண்டோ தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மேலும் ஜனாப் அஸீஸ் பேசுகையில் ஓர் இனத்தின் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்க முடியாது. இதற்கு உதாரணம் நெல்சன் மண்டேலாவின் விடுதலையாகும். இது இன விடுதலைக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் உலகெங்கும் குரல் எழுப்பும் மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றார்.

முன்னாள்உயர் நீதிமன்ற நீதியரசர் ஜயா பத்திரன, பிர

## பார்சல் குண்டால் நீதிபதி கைகளை இழந்தார்

(மன்றிட்)

ஸ்பெயினில் சுப்றீம்கோர்ட் நீதிபதி ஒருவர் வொகுண்டு வெடிப்பில் இரு கைகளையும் இழந்தார், பெனான்டோ ஹிமாடியோ ரசேன என்ற 60 வயது நீதிபதி தனக்கு வந்த பார்சலைப் பிரிக்கும் போது அதிலிருந்த குண்டு வெடித்ததினால் அவரது இரண்டு கைகளும் துண்டாகின. ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மார்பிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளது. தபால்காரன் அப்பார்சலைக் கொண்டு வந்து கொடுத்த போது அதைப் பெற்ற நீதிபதியின் மனைவி அதனை நீதிபதியின் அறையில் வைத்தார்.

## கொக்குவில் இந்துவை சென்ஜோன்ஸ் வென்றது

# செக்கோஸ்லாவாக்கியாவில் வெளிநாட்டு முதலீட்டுக்கு ஊக்கம்

(பிராக்)

சந்தைப் பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் அந்நிய தனியார் நிறுவனங்களையும், அந்நிய கூட்டுத்தொழில் முதலீடுகளையும் செக்கோஸ்லாவாக்கியாவில் ஆரம்பிக்க அநுமதி வழங்கும் சட்ட நகல் ஒன்றை செக்கோஸ்லாவாக்கிய அரசாங்கம் சென்ற வியாழனன்று அனுமதித்தது.

ஆனால், அரச நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்வது தொடர்பான கூட்ட மொன்றுக்கான மேலதிக விபரங்களுக்காகத் திருப்பி அனுப்பப்பட்டது. இரண்டு வாரங்களுக்கிடையில் இது மறுபடியும் அமைச்சரவை அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று ஒரு அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்கள் கடுமையான போட்டி அடிப்படையில் முன்னேறுவதை நாம் விரும்புகிறோம் என்று, மூன்று சட்ட நகலில் இரண்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின் முதலாவது பிரதிப் பிரதம மந்திரி வால்ரர் கோமறீக் கூறினார். இச்சட்டங்களை ஆக்கியவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் தனியார் முதலீடுகளை ஆதரிக்க விரும்புகிறோம் என்றும். இது தொழில் வாய்ப்புகள் உட்படப் பல வாய்ப்புக்களை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன் கெடுபிடியான கம்யூனிஸ்ற் ஆட்சி முறை மாறியதும், பல மேற்கு நாட்டு நிறுவனங்கள் செக்கோஸ்லாவாக்கியாவில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. பொருளாதாரத்தைப் புனரமைப்பதற்காக அரசாங்கமும், அந்நிய முதலீட்டையே பெரிதும் விரும்புகிறதாகத் தெரியவருகிறது. 1945 - 1964 க்குமிடையில் கொண்டுவரப்பட்ட தேசிய மயமாக்கல் சட்டம், அரசாங்கம் பிறப்பித்த கட்டளைகள் பொருளாதாரத்தை மிக இறுக்கமானதாகச் செய்தது தனியார் முதலீட்டுச் சட்டம் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, பொருளாதார கட்டுக்கோப்பைத் தளர்த்தி, அந்நிய முதலீட்டுக்கு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்நியரை முதலீடு செய்ய அனுமதிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கை படிப்படியாக செயற்படுத்தப்படும் என்றும், தேசியமயமாக்கப்பட்ட எல்லா நிறுவனங்களுமே தனியார் மயமாக்கப்பட்டு, தேசிய செல்வத்தை விலைபேச முடியாது என்றும் பிரதம மந்திரி மரியன் கஸ்பா செவ்வாயன்று கூறியுள்ளார்.

## இந்திய மிக் விபத்திற்குள்ளானது

(புதுடில்லி)

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான மிக் விமானம் ஒன்று வியாழக்கிழமை புதுடில்லிக்கருகில் விபத்துக்குள்ளாகியதால் நாலு பேர் கொல்லப்பட்டதுடன், எட்டுப்பேர் காயமடைந்ததாகவும் இந்திய தரப்புச் செய்தி ஒன்று கூறுகிறது. விமான மோட்டி மயிரிழையில் உயிர் தப்பினார். இறந்தவர்களின் சடலங்கள் தரையில் கிடக்கக் காணப்பட்டன.

விபத்திற்குள்ளாகிய மிக் விமானம் எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதை செய்தியில் தெரிவிக்கப்படவில்லை.

## கலப்புச் சிறைச்சாலை

(மட்றிற்)

ஸ்பெயினில் ஆண்களுக்கான சிறைச்சாலையில் 35 பெண் குற்றவாளிகளும் சென்ற வியாழன் முதல் சிறை வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கலப்புச்சிறை ஒரு பரீட்சார்த்த முயற்சி என்றும் இக் கலப்புச் சிறைச்சாலை மட்றிற்றில் உள்ள அலகலா - 2 சிறைச்சாலையில் அமைந்துள்ளது என்றும் தெரிய வருகிறது. ஆண் பெண் இருபாலாரும் கலை நிகழ்ச்சிகளிலும், ஏனைய நிகழ்ச்சிகளிலும் கூட்டாகச் செயற்படுவார்கள். ஆனால் இச்சிறையில் பெண்களுக்கு மறியற்கூடம் ஒன்று மாத்திரம் தனியாக அமைக்கப்பட்டுள்ளதாம்.

## இந்தியா தோல்வி

(கிறைன் சேர்சில்)

நேற்று கிறைன் சேர்ச்சிலில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இந்தியா 18 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 9 விக் கெட்டுக்களையும் இழந்து 50 ஓவர்களில் 187 ஓட்டங்களை பெற்றது. இதற்கு பதிலளித்து ஆடிய இந்தியா 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது. மூன்று நாடுகளுக்கு இடையே நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டியின் போதே இந்தியா தோல்வியடைந்தது. இதற்கு முன் நியூசிலாந்துடனா போட்டியிலும் இந்தியா தோற்றது குறிப்பிடத்தக்கது.

## புதியஜனநாயக நாடுகளுக்குஉதவ அமெரிக்கா முயற்சி

(வாஷிங்டன்)

கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய அமெரிக்காவிலும் தலையெடுக்கும் ஜனநாயக நாடுகளுக்கு உதவுவதற்காக பாகிஸ்கான் மற்றும், வேறு

## காரைநகரில் மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 11 ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும். இம்முறை விசேட நிகழ்ச்சியாக காரைநகரைச் சுற்றி மரதன் ஓட்டப் போட்டியும், அதிவேக துவிச்சக்கர வண்டிப் போட்டியும் நடைபெறும். கல்லூரி விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. க. சதாசிவம், ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்.

## வவுனியாவில்

# இனவாதத்தை எதிர்த்து மண்டேலா போராடினார்

## ஜனாப் அஸீஸ்

(கொழும்பு)

இனவாதம் என்பது தேசிய தன்மையைஅழித்து விடக்கூடியது. இனவாதத்திற்கு எதிராகப் போராடிய போராளி நெல்சன் மண்டேலாவுக்கும், அவரது இனவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் எமது ஆதரவை தெரிவிப்பது நமது கடமையாகும்.

இவ்வாறு ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் பேசுகையில் குறிப்பிட்டார்.

தேசபக்தன் நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக மனித உரிமை அபிவிருத்திக்கான வழக்கறிஞர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இளம் கிறிஸ்தவர் சங்க மண்டபத்தில் திரு. பெர்னாண்டோ தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மேலும் ஜனாப் அஸீஸ் பேசுகையில் ஓர் இனத்தின் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்க முடியாது. இதற்கு உதாரணம் நெல்சன் மண்டேலாவின் விடுதலையாகும். இது இன விடுதலைக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் உலகெங்கும் குரல் எழுப்பும் மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றார்.

முன்னாள்உயர் நீதிமன்ற நீதியரசர் ஜயா பத்திரன, பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி. சில்வா ஆகியோரும் பேசினார்கள். (27)

# வைத்தியசாலை அபிவிருத்தி சபை சுகாதார அமைச்சரை சந்திக்கிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை) அபிவிருத்திச்சபை சுகாதார அமைச்சர். திருமதி. ரேணுகா ஹேரத்தை 19ஆம் திகதி அவரது அமைச்சில் சந்தித்து வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுகின்றது.

வைத்தியசாலைஅபிவிருத்தி சபைத் தலைவர். டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் அமைச்சரைச் சந்திக்கக் கொழும்பு செல்லும் இத்தூதுக்கோஷ்டியில் வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இத்தூதுக் கோஷ்டியினர் பருத்தித்துறைஅரசினர் வைத்திய சாலையின்இன்றைய அவலநிலைகளையும், நோயாளர்கள் அனுபவிக்கும் இன்னல்களையும் அமைச்சருக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவார்கள். அத்துடன்வைத்தியசாலையின் பற்றாக்குறைகள், குறைபாடுகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் அடங்கியமகஜரொன்றையும்அமைச்சரிடம் கையளிப்பர். (52)

# 'கலையைப் பயன்படுத்தும் முறையை ஆற்றுப்படுத்த வேண்டும்'

- மு. பொ.

(விசேட நிருபர்)

"கலைமுகம் இதழைப் பார்த்ததும் பெருமித உணர்வே ஏற்பட்டது. உலகம் என்பது ஊரென்பதிலும் இருந்து அப்பாலும் விரிந்தது என்ற கருத்தைக் கலைப் படைப்புகள் வளர்க்க வேண்டும்".

'கலைமுகம்' காலாண்டு கலை இலக்கிய இதழ் அறிமுக விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய எழுத்தாளர் திரு. க. சொக்கலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அறிமுகவிழா யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றது.

'கலைமுகம்' ஆய்வுரை செய்த 'திசை' ஆசிரியர் திரு. மு. பொன்னம்பலம் "கனவுகளின் வார்ப்பாக கலைமுகங்கள் ஊடகமாகப் பாவிக்கப்பட்டன. கலையை பயன்படுத்தும் முறைமையை ஆற்றுப்படுத்த வேண்டும். பழைய ஆய்வுமுறைகளைப் போன்றில்லாமல் ஆய்வுமுறை பல்கலைக் கழகங்களில் ஆய்வாளர்களால் மாற்றப்பட்டன" எனத் தெரிவித்தார்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையும் பேசினார். கலைமுகம் இதழாசிரியர் திரு. மு. புஷ்பராஜன் நன்றி தெரிவித்தார். (21)

இழந்தார்

(மன்றிட்)

ஸ்பெயினில் சுப்றீம்கோர்ட் நீதிபதி ஒருவர் வெடிகுண்டு வெடிப்பில் இரு கைகளையும் இழந்தார், பெனான்டோ ஹிமாடியோ ரசேன என்ற 60 வயது நீதிபதி தனக்கு வந்த பார்சலைப் பிரிக்கும் போது அதிலிருந்த குண்டு வெடித்ததினால் அவரது இரண்டு கைகளும் துண்டாகின. ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மார்பிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளது. தபால்காரன் அப்பார்சலைக் கொண்டு வந்து கொடுத்த போது அதைப் பெற்ற நீதிபதியின் மனைவி அதனை நீதிபதியின் அறையில் வைத்தார்.

பகுதிக் குழுக்களுடன் போதை வஸ்துக்களை கப்பல் மூலமாகக் கடத்தக் கூடும். சோவியத்யூனியன் இன்ரபோலில் சேர்வது சோவியத் யூனியனுக்குப் பயனாக அமையும் போதை வஸ்து கடத்தல் தொடர்பான விபரங்களை நாம் சோவியத் யூனியனுக்குக் கொடுத்து உதவலாம். ஆனால் தொடர்பு என்பது இருவழிப் பாதை. எமக்கும் சோவியத் யூனியனிடமிருந்து விபரங்கள் தேவைப்படலாம். இவ்வாறு றேமென் கென்டால் தெரிவித்தார்.

சென்ற வியாழன் முதல் சிறை வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கலப்புச்சிறை ஒரு பரீட்சார்த்த முயற்சி என்றும் இக்கலப்புச் சிறைச்சாலை டிம றிற்றில் உள்ள அலகலா - 2 சிறைச்சாலையில் அமைந்துள்ளது என்றும் தெரிய வருகிறது. ஆண் பெண் இருபாலாரும் கலை நிகழ்ச்சிகளிலும், ஏனைய நிகழ்ச்சிகளிலும் கூட்டாகச் செயற்படுவார்கள். ஆனால் இச்சிறையில் பெண்களுக்கு மறியற்கூடம் ஒன்று மாத்திரம் தனியாக அமைக்கப்பட்டுள்ளதாம்.

ஆடிய இந்தியா 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது. மூன்று நாடுகளுக்கு இடையே நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டியின் போதே இந்தியா தோல்வியடைந்தது. இதற்கு முன் நியூசிலாந்துடனா போட்டியிலும் இந்தியா தோற்றது குறிப்பிடத்தக்கது.

## போட்டி

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 11 ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும். இம்முறை விசேட நிகழ்ச்சியாக காரைநகரைச் சுற்றி மரதன் ஓட்டப் போட்டியும், அதிவேக துவிச்சக்கர வண்டிப் போட்டியும் நடைபெறும். கல்லூரி விளையாட்டுத் துறை ஆசிரியர் திரு.க. சதாசிவம், ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார்.

## புதிய அதிபர் நியமனம்

புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு.ஐ.சண்முகநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு புங்/மகாவித்தில் ஆசிரியராக கடமையாற்றியவர். அண்மையில் அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார். (22)

# கொக்குவில் இந்துவை சென்ஜோன்ஸ் வென்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் முரளியின் விறுவிறுப்பான ஆட்டம் சிறப்பாக இருந்தது. இவர் 93 ஓட்டங்களை மின்னல் வேகத்தில் அடித்து கிரிக்கட் ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி மொத்தம் 186 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீபராஜா சிறப்பாக விளையாடி 60 ஓட்டங்களையும், சுதாகரன் 34 ஓட்டங்களையும், பிரேமசீலன 25 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெகேந்திரன் 48 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுக்களையும், பிரசாந்தனும் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

சென். ஜோன்ஸ் தனது முதலாவது இன்னிங்சில் 7 விக்கட்டுக்கள் நஷ்டத்திற்கு 340 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

டி. முரளி மிகவும் சிறப்பாக விளையாடி 93 ஓட்டங்களையும், எஸ். விபிஸ்னா 45 ஓட்டங்களையும் பெற்றனர். பிரதீபராஜா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கட்டுக்களையும் இழந்து மொத்தம் 104 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றுக் கொண்டது.

ஸ்ரீதரன் 25 ஓட்டங்களைப் பெற்றார். பிரசாந்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களையும், முரளி 51 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் சாலும் 50 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றியீட்டினர்.

இப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. (42)

# அகில இலங்கை ரீதியில் இந்துசமயப் போட்டி

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் இந்துசமயப் போட்டி மார்ச் மாதம் 10, 11ஆம் திகதிகளில் வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளன.

போட்டிகளில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, புத்தளம், கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளன.

மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியவர்கள் கொழும்பில் நடாத்தப்படும் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு மாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை ரீதியாலும் பரிசில்களை, சான்றிதழ்களையும் இந்து கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் வழங்குவார். (27)

## கருத்தரங்கு

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் "தேசிய தனித்துவத்தை பேணுவதில் பெருந்தோட்டத்துறை சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற தலைப்பிலான இரண்டு நாட்களுக்கான பயிற்சி கருத்தரங்கு ஒன்றை சனி, ஞாயிறு நாட்களில் நடத்துகின்றது.

மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பி. பஸ்தியாம்பிள்ளை, திருவாளர்கள் எம். வாமதேவன், க. ஆறுமுகம், எஸ். சந்திரசேகரம், எம். எஸ். மூக்கையா, செல்வி. வி. பழனியப்பன், சந்திரராஜா, கலாநிதி சின்னத்தம்பி, கலாநிதி சிவராசா ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (27)

# புதியஜனநாயக நாடுகளுக்குஉதவ அமெரிக்கா முயற்சி

(வாஷிங்டன்)

கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய அமெரிக்காவிலும் தலையெடுக்கும் ஜனநாயக நாடுகளுக்கு உதவுவதற்காக பாகிஸ்தான் மற்றும், வேறு 4 உதவி பெற்ற நாடுகளுக்கான அமெரிக்க பொருளாதார உதவியில் ஐந்து சதவீதத்தை குறைப்பது என்ற பிரச்சினைக்குரிய யோசனைக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. பேக்கர் முழுஆதரவு தெரிவித்துள்ளர். பாகுபாடுற்ற முறையில் உதவி வழங்கப் படுமானால் தான் அதை ஆதரிப்பதாக பாராளுமன்ற துணைக் கமிட்டியிடம் அவர்கூறியதாகவாஷிங்டனில் இருந்து வரும் தகவல் தெரிவிக்கிறது. பாகிஸ்தான், இஸ்ரேல், எகிப்து, துருக்கி பிலிப் ஆகிய ஐந்து பெரும் உதவி பெறும் நாடுகளுக்கு தாப்படும் உதவி குறைக்கப்பட வேண்டும் என்று செனட் சிறுபான்மை தலைவரின் யோசனைக்கு திருபேக்கர் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

# வவுனியாவில் இரத்த வங்கி

வவுனியா ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களின் நலன் கருதி இரத்த வங்கியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நோயாளர் நலன் கருதி பல நற்காரியங்களை ஆற்ற இவ் வங்கி முன் வந்துள்ளது.

போதிய இரத்தம் வைத்தியசாலையில் இல்லாமையால் பல சமயங்களில் அநியாய மரணங்கள் நிகழ்வதாக ஊழியர் பலரும் சுட்டிக்காட்டினர். இரத்த வங்கி திறக்கப்பட்டதால் இந் நிலைமை இல்லாதுபோகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# இஸ்லாமிய மக்கள் இராணுவத்தால் பாதிக்கப்பட்டதையிட்டு மனம் வருந்துகிறேன்

- நெடுமாறன்

"அமைதியாக வாழும் இஸ்லாமிய மக்கள் இராணுவத்தால் படுமோசமாக பாதிக்கப்பட்டதையிட்டு மனம் வருந்துகின்றேன். இம்மக்களின் துயர்களைத் துடைப்பதற்கு என்னால் இயன்ற சகல உதவிகளையும் செய்வதற்கு தேவையான முயற்சிகளை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்" இவ்வாறு திரு. நெடுமாறன் அவர்கள் முஸ்லிம் வட்டாரத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறினார்.

இக் கருத்தரங்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்டது முஸ்லிம் வட்டார மக்கள் பெருமளவில் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்

திரு. நெடுமாறன் மேலும் கூறியதாவது "முஸ்லிம் சகோதர சகோதரிகளாகிய உங்களைக் கண்டு இன்பம் அடையும் அதே நேரத்தில் உங்கள் துயரக் கதைகளை கேட்டு துன்பம் அடைகின்றேன்".

மேற்படி கருத்தரங்கில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு நடேசன் அவர்களும் உரையாற்றினார்.

முஸ்லிம் வட்டாரத்தை சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள் திரு. நெடுமாறன் அவர்களிடம் விபரிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கை ஜனாப் கிதாயா அவர்கள் நெறிப்படுத்தினார். முஸ்லிம் வட்டாரத்தை சார்ந்த ஜனாப் றகுமான் சுகூர் அவர்களுடன் பீற்றர் மரியதாஸ் அவர்களும் இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்தனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

எங்கள் தமிழும் தாயகமும்
எமதே என முரசறைந்து
வருவாய் ஈழநாதமே.

சகலவிதமான புடவைகளுக்கும்
சிறந்த இடம்

லிங்கம்ஸ் ஹவுஸ்

6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

B. 151

Apprentice of Pharmacist

BASIC QUALIFICATION:
Written Knowledge in English

PERIOD OF COURSE: 6 MONTHS

Registration of Pharmacist (External)

medical College Council
Colombo

Registration Made by:
SAYI MEDICAL ACADAMY.
Date of Class 19-03-1990

CONTACT:
Dr. V. P. Sundararajan
SAYI MEDICAL ACADAMY
No. 10, POINTPEDRO ROAD,
JAFFNA.

PARIS TEX-S
153, POWER HOUSE ROAD, JAFFNA.

விடுதலைப் புலிகளின்
தென்மராட்சி கலை, கலாசாரக் குழுவும்
விடுதலைப் புலிகளின்
தென்மராட்சி மாணவர் இயக்கமும் இணைந்து
விடுக்கும்

## அன்பான அழைப்பு

கீழ் குறிப்பிடப்படும் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சியான திறமைசாலிகளையும், கழகங்களையும் தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவிக்குமுகமாக பெறுமதியான பரிசில்களை வழங்கவிருப்பதால், இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் தனிப்பட்ட திறமைசாலிகளோ அல்லது கழகங்களோ சனசமூக நிலையங்களோ எம்முடன் எதிர்வரும் ,10. 03. 1990ற்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. வண்டிச்சவாரி
2. சைக்கிள் ஓட்டப்போட்டி (ஆண்கள், பெண்கள்)
3. மரதன் ஓட்டம்
4. தாச்சிப் போட்டி (கழகங்கள்)
5. கரப்பந்தாட்டப் போட்டி (செற்றப், ஓவர்)
6. சறுக்கு மரம் ஏறுதற் போட்டி
7. சித்திரப் போட்டி (வகைகள் - இயற்கைக் காட்சி, காட்டூன், அரசியல் தொடர்பான கேலிச் சித்திரம்)
8. கட்டுரைப் போட்டி
9. கவிதைப் போட்டி
10. பட்டி மன்றம் (கழகங்கள்)
11. கைவேலை, பன்னவேலை
12. தேங்காய் உடைத்தற் போட்டி
13. தலையணிச் சண்டைப் போட்டி

மாணவர்களுக்கிடையேயும் போட்டிகள் நடைபெறவிருக்கிறது. பாடசாலைகளிற்கு கொத்தணி அதிபரின் ஊடாக விபரமாக அறிவித்தல் தரப்படும்.

நன்றி.

விடுதலைப் புலிகள் தென்மராட்சி கலாசாரப் பிரிவு
மாணவர் இயக்கம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
(தென்மராட்சிக் காரியாலயம்)
சேச் லேன், சாவகச்சேரி.
அல்லது
தென்மராட்சியிலுள்ள விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
பிரதேசக் காரியாலயங்களுடனோ
தொடர்புகொள்ளலாம்.

குறிப்பு:- பொது மக்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி நிகழ்ச்சிகளில் தென்மராட்சிப் பகுதி மக்களிடமும்' மாணவர்களிடமும் இருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

(B- 149)

## முனீஸ்வரன் தேவாலயத்தில் திருட்டு

கொழும்புத்துறை மாச்2

யாழ்.கோட்டை அருள் மிகு முனீஸ்வரன் தேவஸ்தானத்து மடப்பள்ளி அ‍ற திருடரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி மிக்கபலபொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக ஆலய முகாமையாளர் அறியத் தருகின்றார்.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த

## சான்றிதழ் வழங்கும் வைவபம்

(கொழும்புத்துறை)

மூளாயிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர்பயிற்சிநிலயத்தால் நடாத்தப்படும் சான்றிதழ்வழங்கும்வைபவம் வட்டுக் கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்பக் கல்லூரியில் இம்மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற இருக்கிறது.

இவ் விழாவில் யுனி செப்ஸ் தாபனத்தின் திட்ட அதிகாரி திரு. கை. ஸ் கலோன் பிரதம விருத்தினராகப் பங்கு பற்ற உள்ளார்.

கூட்டம் சிறுவர் பாடசாலை பொறுப் பதிகாரி திருமதி இ. பொன்மலர் தலைமையில் நடை பெற உள்ளது. (24)

## பனம் பொருள் கண்காட்சி

(வேலணை)

யாழ். செஞ்சிலுவைச் சங்கமும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து பனம்பொருள் கண்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளனர். சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக கடந்த 3 மாத காலமாகப் பனை ஓலைத் தொழிற் பயிற்சி இடம்பெற்றது. கண்காட்சிக்கு இவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 7ஆம்திகதிபுதன் கிழமை வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மேல் மாடி மண்டபத்தில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் தீவுப்பகுதி பிரதிநிதி திரு. செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெற இருக்கிறது. அன்று பிற்பகல் 3 மணியளவில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் 3 மாத பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும், ஊக்குவிப்புக்கான நன்கொடைப் பணமும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட இருக்கிறது. (14)

வளர்க ஈழநாதமே!

தரமான வீடியோ கசெற்றுக்களை
வாடகைக்கு பெற்றிட
நீங்கள் நாடவேண்டிய இடம்!

S. T. L. வீடியோ கிளப்
No: 3, நவீன சந்தை மேல்மாடி
திருநெல்வேலி. B 143

விற்பனைக்கு
LUGGAGE CYCLE
லக்கேஜ் சைக்கிள்



விபரங்களிற்கு
Roy. J. Chellappa
KOKUVIL ROAD, THIRUNELVELY.
B/96

ஈழநாதம்! சிறப்புற
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

வின்சு ஸ்ரோர்ஸ்

SAYI MEDICAL ACADAMY
Date of Class 19-03-1990

CONTACT:
Dr. V. P. Sundararajan
SAYI MEDICAL ACADAMY
No. 10, POINTPEDRO ROAD,
JAFFNA.

மேற்படி நிகழ்ச்சிகளில் தென்மராட்சிப் பகுதி மக்களிடமும்' மாணவர்களிடமும் இருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

(B- 149)

கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும், ஊக்குவிப்புக்கான நன்கொடைப் பணமும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட இருக்கிறது.

(14)

Roy. J. Chellappa
KOKUVIL ROAD, THIRUNELVELY.
B/96

## முனீஸ்வரன் தேவாலயத்தில் திருட்டு

கொழும்புத்துறை மாச்2

யாழ்.கோட்டை அருள் மிகு முனீஸ்வரன் தேவஸ்தானத்து மடப்பள்ளி அ றை திருடரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி மிக்கபலபொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக ஆலய முகாமையாளர் அறியத் தருகிறார்.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடை பெற்றது. (24)

## மெய்வல்லுனர் போட்டி திகதி மாற்றம்

(புங்குடுதீவு)

எதிர் வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த புங்குடுதீவு கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான 'இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் 8ஆம்,9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறியப்படுகின்றது.

தவிர்க்க முடியாத ஒரு சில காரணங்களாலேயே மேற்படி 'திகதி மாற்றம். ஏற்பட்டதாக புங்/மகா வித்தியாலய உப அதிபர் திரு.ந. தர்மபாலன் தெரிவித்தார்.

இப் போட்டிகளில் நான்கு இல்லங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகள் போட்டியிடுவர். (22)

PARIS TEX-S
153, POWER HOUSE ROAD, JAFFNA.

சிறந்தரகம்! நிதானவிலை!

- எழில் மிகு பட்டுப்பிடவைகள்
- எண்ணற்ற ஜவுளி ரகங்கள்
- கண்கவர் சேட்டிங், சூட்டிங்
- றெடிமேட் ஆடைகள்
- கவுண், ரீசேட்

மற்றும் கவர்ச்சிமிக்க வெளிநாட்டு
சாறி வகைகள் நிதான விலையில்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

பரீஸ் ரெக்ஸ்
153, மின்சாரநிலைய வீதி,
(பஸ் நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன் 23863 (B - 150)

ஈழநாதம்! சிறப்புற
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

வின்சு ஸ்ரோர்ஸ்
அச்சுவேலி

பலசரக்கு பொருட்களை
தூய நிறையுடனும்
மலிவுவுடனும்
கூடிய சேவையை மக்களுக்கு செய்யக்காத்திருக்கிறோம்
வின்சு ஸ்ரோர்ஸ்

மறவாதீர்கள்
நம்பிக்கையின் சின்னம்,
வின்சு ஸ்ரோர்ஸ்
அச்சுவேலி.
(B 145)

(B - 144)

பறக்கின்றது புலிக்கொடி
நின்மதியாக வாழுகின்றார்கள் மக்கள்
தன்னலம் கருதாது பொதுமக்களின்
நலனுக்காக பாடுபட்டு வரும் வீரவேங்கைகளே
அச்சுவேலி கிராமத்து மக்கள்
வரவேற்கின்றார்கள்.
வாழ்க! ஈழநாதம்!
வெற்றி விற்பனையில் முன்னணியில் நீ
நிற்பாய் ஈழநாதமே!

கண்டி ஸ்ரோர்ஸ்
அச்சுவேலி

அன்பு உபசரணையுடன்,
நம்பிக்கைக்குப் பாத்திரமாய்,
நீதியின் போர்வையில்
பலசரக்கு சாமான்கள், பால் மா
மற்றும் பொருட்களையும் குறைந்த செலவில்
குறுகிய நேரத்தில் பெறவேண்டிய இடம்

கண்டி ஸ்ரோஸ்
அச்சுவேலி

### சிந்தனைக்கு

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்டென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 04 - 03 - 90

# அநுதாபம் வேண்டாம் உரியதைக் கொடுங்கள்!

"அங்கவீனருக்கு இடம்கொடுக்க வேண்டும்" என்ற தலைப்பில் எமது பத்திரிகையின் நேற்றைய பதிப்பில், ''மக்கள் மடல்'' பகுதியில் பருத்தித்துறையைச் சேர்ந்த எம். அசோகன் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

கடிதம் என்று இதைச் சொல்வதைவிட நெஞ்சக் குமுறல் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

''அரசாங்க சேவையில் வெற்றிடங்களில் நூற்றுக்கு மூன்று வீதமானவற்றை குறித்த தகுதியுடைய எவரும், தமது அங்க இழப்பானது, தமது கடமைகளுக்குத் தடங்கலற்ற அங்வீகனர்களால் நிரப்புதல் வேண்டும் என்று 1988 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 - ஆந் தேதி அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 27/88 என்னும் சுற்றறிக்கை எல்லா அமைச்சுச் செயலாளர்களையும் பணித்திருக்கிறது,"

இச்சுற்றறிக்கையைச் சுட்டிக்காட்டி சென்ற மாதம் இருபத்தேழாந் தேதிய 'ஈழநாதம்' பத்திரிகையில் 'மக்கள் மடல்' பகுதியில் நா. குகராசா ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

''இந்தச் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆயிரம் பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது குறைந்தது முப்பது தகுதியுடைய அங்கவீனர்களுக்காவது காருண்ய சிந்தையோடு இடம் ஒதுக்கப்பட வேண்டும்" என்று திரு. குகராசா அந்த மடலில் கேட்டிருந்தார்.

நடைபெற்று முடிந்த ஆசிரிய பயிற்சித் தெரிவில் இக்கோரிக்கை செவிமடுக்கப்படவில்லையென்பதைத் தெரிந்துகொண்டதும்தான் நேற்றைய பத்திரிகையில் திரு. எம். அசோகன் தமது உள்ளக் குமுறலைக்

## வவுனியா மாவட்டத்தில் உழுந்துப் பயிர்ச் செய்கையை

# அபிவிருத்தி செய்யும் வழிமுறைகள்

இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களாகிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் உழுந்துச் செய்கைக்கு கடந்த 50 வருடங்களாக பிரசித்தி பெற்ற இடமாகத் திகழ்வது வவுனியா மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் ஆகும்.

இதில் வவுனியா மாவட்டம் இலங்கையின் உளுந்துத் தேவையில் 50% த்துச்கு மேலான தொகையை உற்பத்தி செய்கிறது. உழுந்துச் செய்கைக்குத் தேவையான செங்கபில நிற மண்ணும், செம்மஞ்சள் மண்ணும் 30 அங்குலத்துக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியையும், அறுவடையின் போது தை, மாசி மாதத்தில் நீண்ட பகல் நேரத்தையும், உஷ்ணத்தையும் கொண்டுள்ளது இம் மாவட்டம் கடந்த காலப்பெறுபேறுகளை நாம் உற்றுநோக்கும் போது 1980 - 81 ஆம் ஆண்டில் 13.750 ஏக்கரும், 1985 - 86 ஆம் ஆண்டில் இனக்கலவரம் காரணமாக 730 ஏக்கரும், 1988 - 89 ஆண்டில் 13,450 ஏக்கரிலும் உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1988 - 89 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படை வவுனியா மாவட்டத்தில் இருந்து படிப்படியாக விலகிச் சென்றகால் விவசாயிகள் தமது நிலங்களில் உழுந்துச் செய்கையை சுயமாகச் செய்ய முடிந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் 1983-84 ஆம் ஆண்டில், உச்ச ஏக்கராகிய 30,700 ஏக்சரில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இதிலிருந்து இம் மாவட்டத்தில் 40,000 ஏக்கர் அளவில் உழுந்துச் செய்கையின் இலக்கை எய்த முடியும் எனத் தெரிகிறது.

இவற்றின் விளைவை நாம் உற்று நோக்குகையில் 1980 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 225 கிலோ கிராம் வீதமும் 1985 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 360 கிலோ கிராம் வீதமும் கடந்த கால போகத்தில் (1989 ஆம் ஆண்டில்) ஏக்கருக்கு420கிலோ கிராம் வீதமும் விளைச்சலில் அபிவிருத்தி காணப்பட்டுள்ளது.

டத்தில் புரட்டாதி 15இலிருந்து மழை பெய்ய ஆரம்பித்து கார்த்திகையில் உச்ச மழை வீழ்ச்சியும், பின் தை மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. சராசரியாக புரட்டாதி மாதத்தில் 7 நாட்களில் - 104 மி. லீ. மழை வீழ்ச்சியும், ஐப்பசி மாதத்தில் - 17 நாட்களில் 25 மி.லீ. மழை வீழ்ச்சியும், கார்த்திகை மாதத்தில் 19 நாட்களில் 300 மி. லீ. க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியும், மார்கழி மாதத்தில் 16 நாட்களில் 280 மி. லீ. மழை வீழ்ச்சியும் தை மாதத்தில் 8 நாட்களில் - 99 மி. லீ. மழை வீழ்ச்சியும் இம் மாவட்டத்தில் கிடைக்கிறது. மேற்கூறிய பகிர்ந்த நாட்களில் பெய்யும் மழை வீழ்ச்சி வவுனியா மாவட்டத்தில் உழுந்துச் செய்கையின் விளைச்சலுக்கு முக்கிய அறிகுறியாகும்.

கள் வவுனியா உள்ளூர் இனத்தையும் விதைக்கின்றனர். தமக்கு வேண்டிய விதை உழுந்தை அறுவடைக்காலத்தின் போதே விவசாயிகள் சேகரித்து வைப்பது அவசியமாகிறது. விதை சேகரிப்பின் போது வயலில் நன்கு முற்றிய ஒரே இனமான சிறந்த விதைகளை படங்கின் உதவி கொண்டு சூடு அடித்து, இளம் வெய்யிலில் காயவிடுதல் அவசியம். இப்படியாகக் காயவிடப்பட்ட உழுந்தை சாக்குப் பைகளில் போட முன்பு, ஒரு புசல் உழுந்துக்கு ஒரு அவுன்ஸ் வீதம் 'அக்ரலிக்' தூளைக் கலந்து சாக்குகளில் சேமித்து வைத்தல் விரும்பத்தக்கது. ஒரு காலபோகத்தில் இருந்து அடுத்த காலபோகம் வரை இவ்விதைகளை சேகரிக்க வேண்டுமாகையால், இருமாதத்திற்கு ஒருமுறை இளம் வெய்யிலில் காயவிட்டு, விதை விளைவைக் குறைவாகப் பெறுவதுடன் பூச்சிநோய்த் தாக்கத்திற்கும் தம் பயிர்களை உள்ளாக்குகின்றனர். உளுந்தில் ஏற்படும் பிரதானமான நோய்கள் ''வைரஸ்'', ''துருப்பிடித்தல்'' ஆகும். இவற்றைத் தகுந்த நேரத்தில் கட்டுப்படுத்துதல் அவசியம். மேலும் பச்சைக் கொம்புப் புழு, வரிப்புழு, இலை அரிப் புழு போன்றன அதிக சேதத்தை விளைவிக்கின்றது. இப் புழுக்கள் அதிகமாக பிற்பகலிலும், காலை வேளையிலும் தளிர் இலைகளையும், பிஞ்சுகளையும் உணவாக உண்ணுகின்றன. சாதாரண 1/2அங். புழு தனது வாழ்க்கை வட்டத்தில் 23 இலைகளைச் சாப்பிட்டு தனது உருவத்தை 3அங் பருமனுக்குக் கொண்டு வருகிறது. இப் புழுக்கள் பின உருமாறி பெரிய கபில சாம்பல் நிறங்கொண்ட வண்ணாத்திப் பூச்சியாக மாறுகிறது. உளுந்துச் செய்கை மேற்கொள்ளப்படும் காலங்களில் வயலில் இடைக்கிடை நெருப்பைப்பற்றவைத்து பூச்சியினங்களை அவற்றில் கலந்து அழிக்கலாம். இறுதி முறையாக 'மொனோக்குறோட்டோபஸ்' (Monocrotophos) என்னும் மருந்தைப் பாவித்தல் சிறந்தது.

நன்கு வளர்ச்சி பெற்ற பயிரை அறுவடை மேற்கொண்டு ஒரு முறை வயலில் காயவிட்டு சூடடித்தல் நலம். ஆனால் வவுனியா மாவட்டத்தில் அறுவடைக் காலங்களில் கூலியாட்கள் போதுமானதாக இல்லாததால் பல ஏக்கர் உளுந்து நன்கு காய்ந்து காய்கள் வெடித்து நிலத்தில் விழுகின்றன. இப்படியாக ஏக்கருக்கு 10 - 15 கிலோ வீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் சராசரியாக ஏற்படும் மொத்தச் செலவு 2700/- தொடக்கம் 3200/- வரைக்கும் சராசரி விளைச்சல் திருந்திய முறையில் கையாளப்பட்டால் 800 - 1000 கி. கிராம் வீதம் பெற முடியும். ஒரு கி. கிராம் 8/- வீதம் 6, 400/- விளைவைப் பெறக்கூடியதாக இருக்கிறது. இதில் 3000/- நிகர லாபமாக ஒரு விவசாயி பெற முடியும். மேற்கண்ட சிறந்த முறைகளை உளுந்துச் செய்கையாளர்கள் மேற்கொள்ளுவார்கள் என நம்புகின்றோம்.

திரு. சின்கிலேயர் பீற்றர்
விவசாய டிப்பிளோமா

இச்செய்கையை இரண்டு முறைகளில் அபிவிருத்தி செய்ய முடியும். முதலாவது மொத்த நிலப்பரப்பைக் கூட்டுதலின் மூலமாகவும். இரண்டாவது சிறந்த திருந்திய இனங்களைப் பயிரிட்டு, நவீன விவசாய அணுகுமுறைகளை மேற்கொண்டு விளைவில் அதிகரிப்பைக் காணுவதாகும்.

வவுனியா மாவட்டம் 8 கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் உழுந்துச் செய்கையை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பை எடுத்துக்கொண்டால், செட்டிகுளம் கமநல சேவை நிலையம் 42%மான உழுந்தையும், பம்பைமடு 23%மும், கோவிற்குளம் 11%மும், ஓமந்தை, மடுக்கந்தை, சனகராயன் குளம், உளுக்குளம், நெடுங்கேணி போன்றன மிகுதி 24%மும் உழுந்துச் செய்கையில் ஈடுபட்டுள்ளது. இங்குள்ள விவசாயிகள் பலருக்கு உழுந்துச் செய்கை ஓர் பழமை வாய்ந்த பயிராகவும், சிறு முதலீட்டுடன் இச்செய்கையை மேற்கொண்டு ஏக்கருக்கு 3 - 4 மூடை அல்லது

களைத் தாக்கும் வண்டுகள், அந்துக்கள் போன்றவை இருப்பின் மேலும் 'அக்ரலிக்' மருந்தைப் பாவித்தல் அவசியம். ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 12 கிலோ கிராம் வீதம் விதை உழுந்தைச் சேகரித்து வைத்தல் விரும்பத்தக்கது. இப்படிச் செய்வதனால் விதைப்புக் காலங்களில் ஏற்படும் விதைத் தட்டுப்பாட்டை நீக்குவதுடன், மழை பெய்யத் தொடங்கும் மாதத்தில் உழுந்துச் செய்கையை நேரகாலத்துடன் செய்ய முடிகிறது. அத்துடன் விதைக்கும் காலங்களில் விதை உழுந்தின் விலை ஒரு கிலோவிற்கு 30/-இல் இருந்து 35/- ரூபா வரை விவசாயிகள் செலுத்த வேண்டியுள்ளது. இச்செலவைத் தவிர்க்கலாம்.

உளுந்து ஓர் 'உரம் விரும்பி விளையும்'பயிராகும். எனவே ஏக்கருக்கு 25 கிலோ கிராம் அடி உரம் 'வீ' உரம் இடுவது விரும்பத்தக்கது. வரிசையில் விதைப்பவர்கள் பூக்க முன் 25 கிலோ கிராம் யூரியா இடுவதன் மூலம் சிறந்த பயனைப் பெற்றுள்ளனர்.

களை அடக்கும் இச்செய்

# இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

### நேற்றைய தொடர்ச்சி

திரு. கே. பத்மகாந்தன் யா.சாவகச்சேரிமகளிர்வித்தி. செல்வி. கே. மகாலிங்கம் யா. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. பீ. யோகேஸ்வரி யா. கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி. திரு. எஸ். தில்லைநாதன் யா. வசாவிளான் ம. ம. வித்தி. செல்வி. ஆர். மஞ்சுளாதேவி யா. வரணி ம. வித்தி. செல்வி. ஈ. ஜே. மரிய ஆனந் யா. கலட்டி றோ, க. ஆண்கள் பாடசாலை. திரு. ரி. சிவகுமாரன் யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி. திரு. கே. தவயோகநாதன் யா. வேலாயுதம் ம. வித். செல்வி. எம். டி. எஸ். செபஸ்தியாம்பிள்ளை யா. இளவாலை கன்னியர் மடம் ம. வித்தி. திரு. கே. எம். ஈஸ்வரதேவா யா. நெல்லியடி ம.ம. வித்தி திரு. செல்லையா வசகரன் யா. கரவெட்டி விக்னேஸ்வர வித்தி. திரு. ஜே. ஆர் ஜோர்ஜ் யா. வறுத்தலைவிழான் அ,ம த. க. பா.

யா. யாழ். மத்திய கல்லூரி. செல்வி. எஸ். சரோஜினி யா. புத்தகலட்டி சிறீ விஷ்ணு வித்தி.செல்விசறோஜினிதேவி யோகலிங்கம் யா. மண்டைதீவு ம. வித்திஜே.எவ். றோய் நேசராசா யா. நல்லூர்ச்சித. க. பா. திரு. ே. செந்தூர்வேல் யா. வைத்தீஸ்வரா வித். செல்வி. பீ. பத்மமலர் யா. ஆனைக்கோட்டை றோ. க. த. க. பா. திருமதி. கே. கலைச்செல்வன் யா. அராலி இந்துக் கல்லூரி, செல்வி.கே. மகாலட்சுமி யா. மானிப்பய் மகளிர் கல்லூரி செல்வி. வீ. நாகம்மா யா. சந்திரபுரஸ் சந்தவரோதய ம. வித்தி. திருமதி. சி. சிவகுமாரன் யா. உயரப்புலம் மெ. மி. த. கர் பா. திருமதி. சிவநேசமல. ஜெயபாலன் யா. வேம்படி மகளிர் கல்லூரி. திருமதி. ரீ. நவரெட்ணம் யா. இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. யாழ்ப்பாணம். திருமதி. எல். மகாலிங்கம் யா. இந்து ஆரம்ப பாடசா

அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 27/88 என்னும் சுற்றறிக்கை எல்லா அமைச்சுச் செயலாளர்களையும் பணித்திருக்கிறது,"

இச்சுற்றறிக்கையைச் சுட்டிக்காட்டி சென்ற மாதம் இருபத்தேழாந் தேதிய 'ஈழநாதம்' பத்திரிகையில் 'மக்கள் மடல்' பகுதியில் நா. குகராசா ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

"இந்தச் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆயிரம் பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது குறைந்தது முப்பது தகுதியுடைய அங்கவீனர்களுக்காவது காருண்ய சிந்தையோடு இடம் ஒதுக்கப்பட வேண்டும்" என்று திரு. குகராசா அந்த மடலில் கேட்டிருந்தார்.

நடைபெற்று முடிந்த ஆசிரிய பயிற்சித் தெரிவில் இக்கோரிக்கை செவிமடுக்கப்படவில்லையென்பதைத் தெரிந்துகொண்டதும்தான் நேற்றைய பத்திரிகையில் திரு. எம். அசோகன் தமது உள்ளக் குமுறலைக் கொட்டி எழுதியதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

இயற்கையாகவே அங்கம் குறைந்து பிறந்தவர்கள், பெற்றோர் சரியாகக் கவனிக்காமல் போலியோ என்ற இளம்பிள்ளைவாதத்தினால் அங்கவீனர்களானோர் ஒருபுறமிருக்க கடந்த சில வருடங்களில் வடக்கிலும் கிழக்கிலும் 'ஷெல்' அடிகளாலும் குண்டு வீச்சுகளினாலும் வீதி விபத்துக்களினாலும் அங்கவீனர்களானோரின் தொகை அதிகம் என்றே சொல்ல வேண்டும்.

அங்கம் குறைந்தாலும் மனஉறுதி குறையாமல் தமது கல்வியைத் தொடர்ந்து கற்றுத் தகுதி பெற்றிருக்கின்றனர்.

அங்கம் குறைந்தாலும் தாம் செய்யக்கூடிய தொழிலுக்கு இது தடையாக இருக்க முடியாது என்றால் தகுதியுள்ளவர்கள் தமக்கு அந்தத் தொழிலில் இடம் கிடைக்க வேண்டுமென்று கேட்பதில் எவ்வித தவறும் இருக்க முடியாது.

அங்கவீனர்கள் மீது பரிதாபம் பார்த்து நிதிஉதவி செய்யவேண்டும் என்று கருதுவது அவர்களை அவமானப்படுத்துவதாகும்.

தொழில் செய்யக்கூடிய தகுதியுடைய அங்கவீனர்களுக்குத் தொழில் கிடைக்க வாய்ப்பளிப்பதே அவர்களுக்குச் செய்யக்கூடிய பெரும் உதவியாகும்.

வடமாகாணத்தில் நடந்து முடிந்த ஆசிரியர் பயிற்சித் தெரிவில் எத்தனை அங்கவீனர்கள் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்? ஒருவராவது தெரிவு செய்யப்படாவிட்டால் இங்குள்ள அங்கவீனர் எவருமே இதற்குத் தகுதியில்லையா?

இந்த விபரங்களைக் கல்வித் திணைக்களம் வெளியிட வேண்டும்:

ஆசிரிய பதவி மட்டுமல்ல அரசாங்க சேவையில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும்போது அங்கவீனர்களான இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவர்களும் மனிதர்கள்தாம் என்ற எண்ணம் வேண்டும். மனிதாபிமானத்துடன் இவர்கள் பிரச்சினையைச் சிந்திக்க வேண்டும்.

---

கள் தமது நிலங்களில் உழுந்துச் செய்கையை சுயமாகச் செய்ய முடிந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் 1983-84 ஆம் ஆண்டில், உச்ச ஏக்கராகிய 30,700 ஏக்சரில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இதிலிருந்து இம் மாவட்டத்தில் 40,000 ஏக்கர் அளவில் உழுந்துச் செய்கையின் இலக்கை எய்த முடியும் எனத் தெரிகிறது. இவற்றின் விளைவை நாம் உற்று நோக்குகையில் 1980 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 225 கிலோ கிராம் வீதமும் 1985 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 360 கிலோ கிராம் வீதமும் கடந்த கால போகத்தில் (1989 ஆம் ஆண்டில்) ஏக்கருக்கு420கிலோ கிராம் வீதமும் விளைச்சலில் அபிவிருத்தி காணப்பட்டுள்ளது.

இச் சராசரி விளைச்சல் எமது விவசாயிகளின் முயற்சிக்குப் போதுமானதாக இல்லை. இதை அபிவிருத்தி செய்வதைப்பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உழுந்துச் செய்கைக்கு ஏற்ற காலமாக புரட்டாதி 15 இலிருந்து ஐப்பசி 15 வரை விளங்குகிறது. வவுனியா மாவட்டில் அதிகரிப்பைக் காணுவதாகும்.

வவுனியா மாவட்டம் 8 கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் உழுந்துச் செய்கையை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பை எடுத்துக்கொண்டால், செட்டிகுளம் கமநல சேவை நிலையம் 42%மான உழுந்தையும், பம்பைமடு 23%மும், கோவிற்குளம் 11%மும், ஓமந்தை, மடுக்கந்தை, சனகராயன் குளம், உளுக்குளம், நெடுங்கேணி போன்றன மிகுதி 24%மும் உழுந்துச் செய்கையில் ஈடுபட்டுள்ளது. இங்குள்ள விவசாயிகள் பலருக்கு உழுந்துச் செய்கை ஓர் பழமை வாய்ந்த பயிராகவும், சிறு முதலீட்டுடன் இச்செய்கையை மேற்கொண்டு ஏக்கருக்கு 3 - 4 மூடை அல்லது 280 கிலோ கிராம் உழுந்தையும் பெறுகின்றனர். ஆனால் 10%க்கு குறைவான ஒரு சிலர், சிறந்த அணுகுமுறைகளைக் கையாண்டு ஏக்கருக்கு 7 தொடக்கம் 10 மூடை விளைவைப் பெறுகின்றனர்.

சிறந்த இன விதைகளாக ''டைப் 9'', ''எம். ஐ - 1'' போன்றன விளங்குகின்றன. இருப்பினும் ஒரு சில விவசாயி

செய்வதனால் விதைப்புக் காலங்களில் ஏற்படும் விதைத் தட்டுப்பாட்டை நீக்குவதுடன், மழை பெய்யத் தொடங்கும் மாதத்தில் உழுந்துச் செய்கையை நேரகாலத்துடன் செய்ய முடிகிறது. அத்துடன் விதைக்கும் காலங்களில் விதை உழுந்தின் விலை ஒரு கிலோவிற்கு 30/-இல் இருந்து 35/- ரூபா வரை விவசாயிகள் செலுத்த வேண்டியுள்ளது. இச்செலவைத் தவிர்க்கலாம்.

உளுந்து ஓர் 'உரம் விரும்பி விளையும்' பயிராகும். எனவே ஏக்கருக்கு 25 கிலோ கிராம் அடி உரம் 'வீ' உரம் இடுவது விரும்பத்தக்கது. வரிசையில் விதைப்பவர்கள் பூக்க முன் 25 கிலோ கிராம் யூரியா இடுவதன் மூலம் சிறந்த பயனைப் பெற்றுள்ளனர்.

களை அடக்கம் இச்செய்கைக்கு முக்கியமானதாகும். நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் களைகளை அகற்றி உளுந்தை விதைப்பதினால் உளுந்துப் பயிர் களைகள் எழும்பாதவாறு நிலத்தைமூடி மறைக்கின்றது. ஒரு சில பழைய தரைகளில் களைகள் உளுந்தைமூடி இருப்பதை இங்கு அதிகம் காணக்கூடியதாயிருக்கிறது. இவர்கள்

---

பீ. யோகேஸ்வரி யா. கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி. திரு. எஸ். தில்லைநாதன் யா. வசாவிளான் ம. ம. வித்தி. செல்வி. ஆர். மஞ்சுளாதேவி யா. வரணி ம. வித்தி. செல்வி. ஈ. ஜே. மரிய ஆனந் யா. கலட்டி றோ, க. ஆண்கள் பாடசாலை. திரு. ரி. சிவகுமாரன் யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி. திரு. கே. தவயோகநாதன் யா. வேலாயுதம் ம. வித். செல்வி. எம். டி. எஸ். செபஸ்தியாம்பிள்ளை யா. இளவாலை கன்னியர் மடம் ம. வித்தி. திரு. கே. எம். ஈஸ்வரதேவா யா. நெல்லியடி ம.ம. வித்தி திரு. செல்லையா வசகரன் யா. கரவெட்டி விக்னேஸ்வர வித்தி. திரு. ஜே. ஆர் ஜோர்ஜ் யா. வறுத்தலைவிழான் அ,ம த. க. பா.

**நுவரெலியா:**

திரு. எஸ். கிவகுமார் யா. உரும்பிராய் சந்திரோதய வித்தி. திரு. ஏ. எஸ். சரவணபவான் யா. மகாஜனாக் கல்லூரி திரு. என். சிவராசா யா. கொட்டடி நமசிவாய வித்தி. திரு. எஸ். சண்முகநாதன் யா. புற்றளை ம. வித்தி. செல்வி. எஸ். செல்வராணி யா. சோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. திருமதி. எஸ். கதிர்காமநாதன் யா. மகாஜனாக் கல்லூரி எஸ். பாக்கியரஜனி யா. ஏழாலை சைவ மகாஜனா வித்தி. திரு. சி. அருள்மொழி யா. புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவத்துறை. திரு. இ. ராகவன் யா. பருத்தித்துறை வித்தி விநாயகர் வித்தி திரு. எஸ். கணேசகுமார் யா. சுளிபுரம் அ.மி. த. க. பா. செல்வி.கே. சிவகுமாரி யா. அல்லாரை அ. த. க. பா. செல்வி. அனுஷாதேவி எஸ். யா. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. செல்வி.எம். பி. சாந்தி இராசநாயகம்

யோகலிங்கம் யா. மண்டைதீவு ம. வித்தி ஜே.எவ். றோய் நேசராசா யா. நல்லூர்சிசி த. க. பா. திரு. சே. செந்தூர்வேல் யா. வைத்தீஸ்வரா வித். செல்வி. பீ. பத்மமலர் யா. ஆனைக்கோட்டை றோ. க. த. க. பா. திருமதி. கே. கலைச்செல்வன் யா. அராலி இந்துக் கல்லூரி, செல்வி.கே. மகாலட்சுமி யா. மானிப்பய் மகளிர் கல்லூரி செல்வி. வீ. நாகம்மா யா. சந்திரபுரஸ் சந்தவரோதய ம. வித்தி. திருமதி. சி. சிவகுமாரன் யா. உயரப்புலம் மெ. மி. த. கர் பா. திருமதி. சிவநேசமல. ஜெயபாலன் யா. வேம்படி மகளிர் கல்லூரி. திருமதி. ரீ. நவரெட்ணம் யா. இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. யாழ்ப்பாணம். திருமதி. எல். மகாலிங்கம் யா. இந்து ஆரம்ப பாடசாலை. யாழ்ப்பாணம். திரு.எஸ் சிவலிங்கம் யா. குரும்பசிட்டி பொன் பரமானந்த வித்தி. திருமதி. எம். ப்ரம்சோதியா. நல்லூர் ஞானோதய வித்தி. திரு. எஸ். கந்தசாமியா. மண்டைதீவு றோ. க. த. க. பா திருமதி. எஸ். ஜெயவீரசிங்கம் யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி திரு. எஸ் இராசரெத்தினம் யா. மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை. திருமதி. எம். சிவசுப்பிரமணியம் யா. வேம்படி மகளிர் உயர் பாடசாலை. திரு. ஏ. சிறீக்குமரன் யா இளவாலை புனித ஹென்றி கல்லூரி. செல்வி. ப. இராசசிறி யா. இந்து மகளிர் கல்லூரி. திருமதி. பி. பாலகெங்காதரன் யா. ஊரெழு கணேச வித்தி. திரு. பி. செல்வநாயகம் யா. கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி திருமதி. இந்திரா சற்குணானந்தம் யா. யாழ் இந்துக் கல்லூரி செல்வி. ரீ. தனலக்சுமி யா. தந்தை செல்வா தொடக்க நிலையப்பள்ளி.

முற்றும்.

---

# யாழ். பல்கலைக்கழக நூல் நிலைய அவல நிலை

வட பகுதியிலே உயர்கல்வி நிறுவனமாக விளங்குகின்ற யாழ். பல்கலைக் கழகத்திற்கு இலங்கை அரசாங்கமும், ஏனைய வெளிநாடுகளும் பல்வேறு நிலையங்களில் உதவி வருகின்றமை கண்கூடு. பல்கலைக் கழகத்திலே துரித கதியில் பல்வேறு துறைகள் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்மாணவர்கள் நலன் கருதிச் செயற்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். அதேவேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின முதுகெலும்புபோல அமைந்து விளங்குவது நூல் நிலையமாகும். இந் நூல் நிலையத்தில் பல்வேறு வகையான கிடைத்தற்கரிய புத்தகங்கள், ஆவணங்கள், பத்திரிகைகள் பேணப்பட்டுள்ளன. இந்நூல் நிலையத்திலே பல்வேறுவகையான பிரிவுகளுக்கும் தனித்தனியாக ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டும், அங்குள்ள அரிய பெரிய நூல்கள் நாளுக்குநாள் மாயமாக மறைந்து விடுகின்றன. ஒரு மாதத்திற்கு முன்னர் பார்த்த புத்தகத்தினுடைய பதிவு அட்டை இருக்கின்றது. ஆனால் புத்தகமோ அதற்குரிய இடத்தில் இல்லை. இது பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபொழுது அவர்கள் தங்களுக்கு இதுபற்றி எதுவும் தெரியாது எனக் கையை விரிக்கின்றனர்.

பல்வேறு கற்கை நெறிகளைக்கொண்ட பல்கலைக் கழகத்தில், அதன் பிரதான அம்சமான நூல் நிலையத்திலே மாணவர்கள் தமக்கு வேண்டிய நூல்களையோ அல்லது பத்திரிகைகளையோ உடன் பிரதிபண்ணி எடுக்கக் கூடிய வசதிகள் இல்லாமை மாணவர்களாகிய எமக்கு பெரும் அதிருப்தியைத் தருகின்றது. இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் கதைத்தும் எதுவித மான பலனும் கிடைக்கவில்லை.

## மக்கள் மடல்

நூல் நிலையத்திலே போதியளவு ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். சிலவேளைகளில் ஒருவரே இரண்டு மூன்று பகுதிகளைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது, ஆகையால் அதே வேளையில் போதியளவு ஊழியர்கள் நூல்நிலைய அலுவலகத்தின் உள்ளே இருந்து தங்கள் வீட்டுக் கதைகளைக் கதைத்து வீண் பொழுது போக்குவதையும் நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்காக இதனுடைய நூலகத்தின் தேவை கருதி பல ஆயிரக்கணக்கான புத்தகங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் யாழ். பல்கலைக் கழகத்திற்கு வாங்கப்பெற்றன. காலம் செல்ல பல்கலைக் கமகத்தின் நூலகம் வளர்ச்சியடைந்ததும் அந்நூல்கள் மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் தற்பொழுது ஓர் புத்தக விபரத்தினை நூல் பகுப்பாக்கத்தில் பார்த்துவிட்டு. அந்நூலினைக் கேட்டால் அந்நூல் யாழ்ப்பாணக் கல்லூரிக்குக் கொடுத்துவிட்டதாகவும், அல்லது காணாமற் போய்விட்டது என்றே பதில் தரப்படுகின்றது. போதியளவு ஊழியர்கள் கடமையாற்றுகின்ற நூலகத்தில் எவ்வாறு புத்தகங்கள் திடீர் திடீரெனக் காணாமற்போகும்? சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கவனமின்மையா அல்லது ஊழியர்கள் கவனமின்மையா இதற்குக் காரணம் என்பது தெரியவில்லை. இதுபற்றி பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கூடிய அக்கறை எடுத்தும், மேலதிகாரிகள் அக்கறையின்றி இருப்பதாகத் தெரியவருகிறது. இதுபற்றி உபவேந்தர் அவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நூல் நிலையத்தைப்
பயன்படுத்தும்
யாழ். பல்கலைக் கழக
மாணவர்கள்.

---

# உடற்பயிற்சிப் போட்டிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி கோத்தணி பாடசாலை மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பதின்மூன்று வயது பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடம் அச்சுவேலி புனித திரேசாள் வித்தியாலயமும், இரண்டாவது இடம் இடைக்காடு மகாவித்தியாலயமும், மூன்றாம் இடம் தோப்பு அருணந்தி வித்தியாலயமும் பெற்றன. பதின்மூன்றுவயது ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தை இடைக்காடு மகா வித்தியாலயமும், இரண்டாவது இடத்தை அச்சுவேலி மகாவித்தியாலயமும் மூன்றாவது இடத்தை தோப்பு அருணந்தி வித்தியாலயமும் பெற்றன.

பதினேழு வயதுப் பெண்களுக்கான போட்டியில் முதலாவது இடம் அச்சுவேலி திரேசாள் மகளிர் வித்தியாலயமும், பதினேழு வயது ஆண்கள், 19 வயதுப் பெண்கள் ஆகிய இரண்டு பிரிவிலும் அச்சுவேலி மகாவித்தியாலயமும் முதலாமிடமும் பெற்றது. (16)

ஈழநாதம்

# ஆறாவது திருத்தம் பற்றியே ஜனாதிபதி பேச்சு நடத்துகிறார்

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு சகல அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெறும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி ஆர் பிரேமதாசா இப்பொழுது தனித்தனியாக அரசியல் கட்சிகளின பிரதிநிதிகளையும் இயக்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிவருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாப் அசீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளை நேற்று ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்துப்பேசியபோதும் ஆறாவது திருத்தச்சட்டத்தைப் பற்றிய பேச்சே முக்கியமாக இடம்பெற்றதாகத் தெரிகிறது.

## பாலைதீவில் நேற்று பலத்த மழை ஏழாயிரம் பக்தர்கள் ஆராதனை

(விசேட நிருபர்)

பாலைதீவில் ஏழாயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கூடினர். புனித அந்தோனியார் ஆலயத்தில் திருநாள் ஆராதனைகள், பூசைகள் நடைபெறாத போதிலும் சென்றிருந்த பக்தர்கள் கோயிலில் மெழுகு திரிகள் கொழுத்தி பிரார்த்தனை செய்து வழிபட்டனர்.

இன்னும் சிலர் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். இதேவேளை நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் தீவில் பலத்த மழைபெய்ததாகவும் தெரிய வந்தது.

இன்று பெரும்பாலான யாத்திரிகள் அங்கிருந்து திரும்புவர் எனினும் ஒருசிலர் 7ஆம் திகதி வரை தங்கித் திரும்புபவர்களும் உண்டு. இன்று காலை இங்கிருந்து சென்று மாலை திரும்பிவிடுபவர்களையும் காணலாம். (21)

## இன்று கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் 4ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமைகாலை ஒன்பது மணிக்கு 23, சிவன் பண்ணை வீதி, கொட்டடியில் இருக்கும் சமூகமேளப் பணிமனையில் தமைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெற உள்ளது.

## வைத்தியசாலையில் நோயாளர் கஷ்டம்

(வவுனியா)

வவுனியா ஆதார வைத்தியசாலையில் 'கண்டீன்' நடத்தி வந்தவருக்கும் - வவுனியா ஆதார வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்துக்கும் இடையே நடைபெற்ற நிர்வாகச் சிக்கல்களால் ஆதார வைத்தியசாலையில் இயங்கிவந்த 'கன்டீன்' இழுத்து மூடப்பட்டது.

இதனால் நோயாளர்கள் தமது அன்றாட தேவைப் பொருட்களை வாங்குவதற்கும் சுடுதண்ணீர் எடுப்பதற்கும் வவுனியா நகரத்துக்கு வரவேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

## விமான நிலையவிஸ்தரிப்பினால் பல குடும்பங்கள் அவதி

(வவுனியா)

வவுனியாவில் சில ஆண்டுகட்கு முன்பு விமானத்தள விஸ்தரிப்புக்காகஎடுக்கப்பட்ட காணிகளில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் அங்கிருந்து எழுப்பப்பட்டனர்.

நாம் விமானத்தள விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அங்கிருந்து பம்பைமடுவில் குடியேறின. நாங்கள் எமது சொந்த செலவிலேயே இவ்விடங்களில் குடியேறினோம். வசதியாக வாழ்ந்த

## பெருமாளின்செயல் ஒரு அபசகுணம்

-ஈ. எல். கே. பி.

வடக்கு கிழக்கு பாகாணத்தைத் தன்னாதிக்கமும் இறமையும் கொண்ட குடியரசாக பெருமாள் பிரகடனம் செய்திருப்பது ஒரு அபசகுனம் என ருக்மன் சேனநாயக்கா தலைமையில் இயங்கும் ஐக்கிய இலங்கைக்கான மக்கள் கட்சி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அக்கட்சி விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்து விடவேண்டும் என்ற தமது கட்சியின் கோரிக்கையை அரசாங்கம் அசட்டை செய்தமையால்தான் இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது,

### காலம்தான்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான பெயரில் இருப்பது போல் தெரிகின்றது. இந்திய இராணுவம் இந்தமாத இறுதியில் முற்றாக வெளியேறி விடுவார்கள். விடுதலைப் புலிகள் பெருமளவு பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. இலங்கை அரசு மாகாணசபை கலைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறது. இப்படியான ஒருபலவீனமான நிலையில் இருந்து கொண்டு இப்படியான கோரிக்கைகளை நீங்கள் விடுப்பதை மக்கள் பெரிதாக மதிப்பார்களா?'' என்ற மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. சாம் தம்பிமுத்து பின்வருமாறு பதிலளித்தார்.

தமிழ் மக்களினால் தெரிந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த முடிவை எடுத்து ஈழப் பிரகடனத்தைச் செய்துள்ளார்கள். தமிழ் மக்களது நலனுக்காக செய்யப்பட்டது இந்த முடிவை அமுல்படுத்த

இந்திரா காங்கிரஸ்

## இளைஞர் பிரிவுபொதுச்செயலர் குத்திக்கொலை

(சென்னை)

தென்சென்னை மாவட்ட இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவின் பொதுச்செயலாளர் திலீப்குமார் (வயது 32 நேற்று முன்தினம் இரவு மைலாப்பூரில் வைத்து கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார்.

இவரது கொலைக்குக் காரணம் இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவினரிடையே ஏற்பட்டக் கருத்து வேறுபாடுதான் எனக் கருதப்படுகின்றது.

எட்டுப்பேர் கொண்ட கோஷ்டி ஒன்றால் படுமோசமாகக் குத்தப்பட்ட திலீப்குமார் ராயப்பேட்டை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது இறந்தார்.

இக்கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட 8 பேரில் இரண்டு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கத்திப்பாறை ஜனார்த்தனம் மற்றவர் துரைக்கண்ணு என்று தெரிய வருகிறது இவர்களும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களேயாகும் திலீப்குமாருடன் கூடச்சென்ற இந்திரன் நாயர் என்பவரும் கத்திக் குத்தில் படுகாயமுற்றார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மைலாப்பூர் உதவிப் பொலிஸ் கமிஷனர் பாக்கியசாமி புலன் விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்.

### பாத்திரங்கள்

## தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

(அராலி)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தமிழ் தட்டெழுத்தாளர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பதாரிகள் நாற்பது வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் பதினைந்தாம் திகதியாகும் (20)

## தொழில்நுட்பகல்லூரி இறுதி ஆண்டு பரீட்சை

(அராலி)

இலங்கை தொழினுட்பக் கல்லூரிகளின் ஆயிரத்து தொழாயிரத்துஎண்பத்தொன்பதாம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை வரும் மேமாத இறுதியில் ஆரம்பமாகும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளதாக யாழ். தொழினுட்பக் கல்லூரி அதிபர் திரு. இராசேந்திரா அறியத்தருகின்றார். (20)

## 75000 காட்டு மரங்களை இந். இராணுவம் அழித்தது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் அரச அமைப்புகள் என்பவற்றிற்கு விநியோகம் செய்யவெனவும் வனவிஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் மேடைகள்தயாரித்து வித்துக்கள் இட்டுவளர்க்கப்பட்ட எழுபத்தையாயிரம் காட்டு மரங்களையும் கடந்த காலத்தில் காட்டு வள திணைக்கள கட்டிடத்தில் இந்திய இராணுவம் முகாம் அமைத்துஇருந்த போது நாசப்படுத்தியுள்ளனர்

இதன் மூலம் இத்திணைக்களத்திற்கு ரூபா ஒருலட்சத்தி ஐம்பதரயிரம் நட்டம் ஏற்பட்டுள்ளது. என இத்திணைக்கள யாழ். வனபரிபாலன அதிகாரிதெ்ரிவித்தார் (லோ)

## இந்திய இராணுவம் எமக்கு உதவி செய்யும்

-பெருமாள்

''இலங்கை இராணுவம் ஒரு வெளிநாட்டு இராணுவம் என்ற முறையில் தற்போது பிரகடனப் படுத்தப் படுத்தப் பட்டுள்ள ஈழ ஜனநாயக் குடியரசை விட்டு வெளியேறி விடவேண்டும். உத்தேச ஈழ ஜனநாயக குடியரசில் சுமார் 15000 இராணுவ துருப்புகள் தங்கியுள்ளனர். இவ்வாறு இவர்கள் தங்கி இருப்பது என்பது இன்னொரு நாட்டின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் அவமதிப்பதாகும்''

மேற்கண்டவாறு திருகோணமலையில் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களுக்கு முதல்வர் பெருமாள் குறிப்பிட்டுள்ளார். பத்திரிகையாவர்கள் அந்நிய இராணுவம் உங்கள் குடியரசைவிட்டு வெளியேற வேண்டும் என்றால் இந்திய இராணுவத்தின் கெதி என்ன என்று கேட்டதற்கு ''இந்திய இராணுவம் எமது குடியரசைப் பாதுகாக்க உதவி செய்யும்'' என்று பெருமாள் குறிப்பிட்டார்.

## பேருந்துகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

பஸ் பற்றாக்குறை காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையினரால் பயணி

(வவுனியா)

வவுனியா ஆதார வைத்திய சாலையில் 'கண்டீன்' நடத்தி வந்தவருக்கும் - வவுனியா ஆதார வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்துக்கும் இடையே நடைபெற்ற நிர்வாகச் சிக்கல்களால் ஆதார வைத்தியசாலையில் இயங்கிவந்த 'கன்டீன்' இழுத்து மூடப்பட்டது.

இதனால் நோயாளர்கள் தமது அன்றாட தேவைப் பொருட்களை வாங்குவதற்கும் சுடுதண்ணீர் எடுப்பதற்கும் வவுனியா நகரத்துக்கு வரவேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

வார்கள். விடுதலைப் புலிகள் பெருமளவு பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. இலங்கை அரசு ம்ாகாணசபை கலைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறது. இப்படியான ஒருபலவீனமான நிலையில் இருந்து கொண்டு இப்படியான கோரிக்கைகளை நீங்கள் விடுப்பதை மக்கள் பெரிதாக மதிப்பார்களா?'' என்ற மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. சாம் தம்பிமுத்து பின்வருமாறு பதிலளித்தார்.

தமிழ் மக்களினால் தெரிந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த முடிவை எடுத்து ஈழப் பிரகடனத்தைச் செய்துள்ளார்கள். தமிழ் மக்களது நலனுக்காக செய்யப்பட்டது இந்த முடிவை அமுல்படுத்த முடியுமோ இல்லையோ என்பது எதிர்காலத்தில் எழக்கூடிய கேள்வி உங்கள் கேள்விக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இளைஞர் பிரிவினரிடையே ஏற்பட்டக் கருத்து வேறுபாடு தான் எனக் கருதப்படுகின்றது.

எட்டுப்பேர் கொண்ட கோஷ்டி ஒன்றால் படுமோசமாகக் குத்தப்பட்ட திலீப் குமார் ராயப்பேட்டை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது இறந்தார்.

இக்கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட 8 பேரில் இரண்டு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கத்திப்பாறை ஜனார்த்தனம் மற்றவர் துரைக்கண்ணு என்று தெரிய வருகிறது இவர்களும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்

# விமான நிலையவிஸ்தரிப்பினால் பல குடும்பங்கள் அவதி

(வவுனியா)

வவுனியாவில் சில ஆண்டுகட்கு முன்பு விமானத்தள விஸ்தரிப்புக்காகஎடுக்கப்பட்ட காணிகளில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் அங்கிருந்து எழுப்பப்பட்டனர். அவர்களின் வீடுகள் அடித்து நொருக்கப்பட்டன. இவர்கள் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறும்போதுஅவர்கட்கு நட்டஈடு தரப்படும் என அரச அதிபரால் வாக்குறுதி அளிக்கப்பட்டதாம். ஆனால் இன்று வரை அந்த வாக்குறுதி அளிக்கப்படவில்லையெனப் பம்பைமடுவில் குடியேறிய அகதிகள் பலர் இன்று ''ஈழநாதம்'' நிருபருக்குத்தெரிவித்தனர். அவர்களில் சிலர் மேலும் கூறியதாவது:-

நாம் விமானத்தள விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அங்கிருந்து பம்பைமடுவில் குடியேறின. நாங்கள் எமது சொந்த செலவிலேயே இவ்விடங்களில் குடியேறினோம். வசதியாக வாழ்ந்த நாங்கள் இன்று கஷ்டமான நிலைமையில் இருக்கின்றோம் ஆயினும் எமக்கு இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# இந்திய இராணுவம் எமக்கு உதவி செய்யும்

-பெருமாள்

''இலங்கை இராணுவம் ஒரு வெளிநாட்டு இராணுவம் என்ற முறையில் தற்போது பிரகடனப் படுத்தப் படுத்தப் பட்டுள்ள ஈழ ஜனநாயக் குடியரசை விட்டு வெளியேறி விடவேண்டும். உத்தேச ஈழ ஜனநாயக குடியரசில் சுமார் 15000 இராணுவ துருப்புகள் தங்கியுள்ளனர். இவ்வாறு இவர்கள் தங்கி இருப்பது என்பது இன்னொரு நாட்டின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் அவமதிப்பதாகும்''

மேற்கண்டவாறு திருகோணமலையில் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களுக்கு முதல்வர் பெருமாள் குறிப்பிட்டுள்ளார். பத்திரிகையாவர்கள் அந்நிய இராணுவம் உங்கள் குடியரசைவிட்டு வெளியேற வேண்டும் என்றால் இந்திய இராணுவத்தின் கெதி என்ன என்று கேட்டதற்கு ''இந்திய இராணுவம் எமது குடியரசைப் பாதுகாக்க உதவி செய்யும்'' என்று பெருமாள் குறிப்பிட்டார்.

கள் இட்டுவிளாக்கப்பட்ட ஏழு பத்தையாயிரம் காட்டு மரங்களையும் கடந்த காலத்தில் காட்டு வள திணைக்கள கட்டிடத்தில் இந்திய இராணுவம் முகாம் அமைத்துஇருந்த போது நாசப்படுத்தியுள்ளனர்

இதன் மூலம் இத்திணைக்களத்திற்கு ரூபா ஒருலட்சத்தி ஐம்பதரயிரம் நட்டம் ஏற்பட்டுள்ளது. என இத்திணைக்கள யாழ். வனபரிபாலன அதிகாரிதெ்ரிவித்தார் (லோ)

# திருமலையில் இரண்டுலட்ச ரூபா கொள்ளை கான்ஸ்டபிள் பலி

(திருகோணமலை)

திருகோணமலைகடற்படை முகாமிலிருந்து இலங்கை வங்கிக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்ட பணத்தை ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று வழியில்இடைமறித்து ரூபா 2லட்சத்தைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளது. கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம் என்று திருகோணமலை பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸ்படையைநிராயுதபாணியாக்கி மூன்று பணப்பைகளை மாத்திரம் கொள்ளைக் கோஷ்டி எடுத்துச் சென்றுள்ளது. சப் இன்ஸ்பெக்டரை பணயக் கைதியாக எடுத்துச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் பின்னர் அவரை வாகனத்திலிருந்து கீழே தள்ளிவிட்டிருக்கிறார்கள். சப் இன்ஸ்பெக்டர் சந்திரசேனா காயங்களுடன் உயிர் தப்பினார். இச் சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்டார்

# பாத்திரங்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சுமார் ஆயிரம் குடுபங்களுக்கு அலுமினியச் சமையல் பாத்திரங்கள் இலவசமாக வழக்கப் பட்டன.

அப்பகுதியில் உள்ள கிராம சேவையாளர்களுக்கு ஊடாக இவ் அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# விடுதலைப்புலிகளின் ''கவிதாலயா'' அரங்கேறியது

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகள் கவிதாலயா என்ற இசைக் குழுவொன்றை ஆரம்பித்துள்ளார்கள் கவிதாலயாவின் நலன் விரும்பிகள்'! என இந்த நிகழ்ச்சிக்கு அவர்கள் பெயர் சூட்டியுள்ளனர். இந்த இசை கோஷ்டியின் முதலாவது அரங்கேற்றம் தீவுப் பகுதியாகிய கரம்பன் என்னுமிடத்தில் அண்மையில் நடைபெற்றது தீவுப்பகுதியிலும் ஏனைய இடங்களிலும் மரணித்த விடுதலைப் புலிகளின் வீரர்களை நினைவு கூர்ந்து கவிதைகளைப் பாடி இசை நிகழ்சிகளை இவர்கள் நடாத்தினார்கள் புதுமையானதும், மக்களைக் கவரக் கூடியதுமான இந் நிகழ்ச்சியை மக்கள் வெகுவாக ரசித்தது டன் பாராட்டும் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கவிதாலயா இசை நிகழ்ச்சி தீவகத்தின் பல பகுதிகளிலும் மேடையேறவிருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டது. வடக்கு. கிழக்கு மாகாணத்தில் இது ஒரு புதுமையான நிகழ்ச்சி யென கூறப்படுகிறது. (15)

# பேருந்துகள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

பஸ் பற்றாக்குறை காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையினரால் பயணிகளைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுறது.

அரசாங்கத்தால், வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் பஸ்களில், அரைவாசிக்குக் குறைவானவையே தற்போது சேவையிலீடுபடுத்தப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

இதன் காரணமாக தீவுப் பகுதிப் பாதைகளில் குறிப்பிட்ட சில பஸ்களே மறிப்மாறி சேவையில் ஈடுபடுத்தாபடுவதாகவும் கூறப்படுகிறது.

பல பஸ்கள் பழுதடைந்த நிலையில் கோண்டாவில் டிப்போவில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## யாழ். நகரை-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம்பங்களிலேயே யாழ். மாநகரசபையினால் தொட்டிகள் அமைக்கப்படும் என்றும் யாழ் மாநகரசபை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அடுத்ததாக நகரத்திற்கு வெளியே உள்ள-நல்லூர் வீதி கோவில்வீதி, நாவலர் வீதிச் சந்தி, பலாலி வீதி, அரசடி ஆகிய வீதிகளிலும் இவற்றுக்குட்பட்ட பகுதியில் இருக்கும் வீதிகளிலும் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்படும். குறிப்பிட்ட இப்பகுதி வீதிகளில் உள்ள வீடுகளுக்கு மேற்படி பெட்டிகள் வழங்கப்பட்டு வீடுகளிலிருந்து வெளிவரும் குப்பை கூளங்களை போடுவதற்கு அமைவாக வைக்கப்படும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த நகர சுத்திகரிப்பு வேலைகளை யாழ். சுகாதார வைத்திய அதிகாரி திருமதி. சு. கதிர்காமர் அவர்களின் வழிநடத்தலில் இயங்கும் என்றும், இரு வாரங்களில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் இது வெற்றியளிக்கும் பட்சத்தில் மற்றைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் குறிப்பிட்ட அவர், இதற்குப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (தி)

## கம்யூனிஸ்ட். . .

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

நிதியாக அபுயூசுப் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப் பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்ந்தும் அங்கத்தவராக இருப்பதாயின், இது பற்றியும், இன்றைய அவரது நிலைப்பாடு பற்றியும் தமது கருத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு அவரை எழுத்து மூலம் கேட்டிருந்தது ஆனால் அபுயூசுப் இதற்குப் பதில் கொடுக்கத் தவறியதனால் இவரைக் கட்சியிலிருந்து விலக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதாக கம்யூனிஸ்ட் கட்சியின் கே. பி. சில்வா கருத்துத் தெரிவித்

## சட்டவிரோத. . .

(2ஆம் பக்கத் தொடர்ச்சி

வலு போதியளவு இல்லாத காரணத்தாலேயேஇந்தநிலை ஏற்பட்டடிருக்கிறது. மின்சாரசபை மின்மாற்றிகளில் மின் வலுவை போதிய அளவு வழங்க வேண்டும் என்று கூறினார். (தி)

## தொண்டர். . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

படையை விட்டு விலகி விட்டார்களாம். இதுவரை தொண்டர் படையிலிருந்து முக்கால்வாசிப் பேர் ஓடி விட்டதாக உத்தியபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பலர், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களுடண் மறைந்துவிட்டார்களாம். எந்தவிதமான இயக்கத்தையும் சாராதவர்கள்தான் இப்பொழுது மக்கள் தொண்டர் படையில் மிஞ்சி இருக்கிறார்களாம்.

## கிராமியப். . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், உபதலைவர் கரிகாலன்மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி கருணா உப செயலாளர் செல்வி சுந்தரி தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வி சீத்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாத்தயா தொடர்ந்து பேசுகையில் எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதில் பல்கலைக் கழகத்தின் பங்குபற்றியும் குறிப்பிட்டார். விவசாயத்திலும், தொழிற்துறையிலும் அறிவின் களஞ்சியமாகத் திகழும் இப் பல்கலைக்கழகம் ஏழைத் தொழிலாளர், விவசாயிகள் ஆகிய மக்களின் வாழ்வை மேம்படுத்த ஆக்கபூர்வமான முறையில் செயற்படவேண்டும். உங்களது தொழில்நுட்ப அறிவு ஏழை மக்களின் வாழ்விற்கு விடிவிளக்கை ஏற்றிவைப்பதாக பயன்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அன்ரன் பாலசிங்கம் பேசுகையில் இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பற்றி எடுத்துரைத்தார். யோகி கருத்தரங்கில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தார்.

இக் கருத்தரங்கில் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் நெடுமாறனும் கலந்து கொண்டு பேசினார்.

# கொழும்பில் பதற்றம்

- பி. பி சி

(கொழும்பு)

வரதராஜப் பெருமாளின் ஒருதலைப் பட்சமான ஈழப் பிரகடனத்தையடுத்து திருகோணமலையில் எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையை ஆராய அனுப்பப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்கா கொழும்பு திரும்பியதும் முப்படைத்தளபதிகளையும் அழைத்து ஆலோசனை செய்தார்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அதிகமாக வாழும் பகுதிகளில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம்பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

கொழும்பு பத்திரிகைகள் பெருமாளின் நடவடிக்கைகள் குறித்து அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிடுவதால் சிங்கள மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் பதட்டநிலை உருவாகலாம் எனவும் பி. பி. சி. கடந்த இரவு தெரிவித்தது.


# யூனிவேர்சல்

கல்வி நிறுவனம்

ஆசிரியர்கள் மாணவர்கள் பங்கேற்கும்

# கிரிக்கெட்போட்டி

காலம்:- 05 - 03 - 1990

(பி.பகல் 3-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை)

இடம்;- யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம்.

B 158



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.